DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

PYRAMID GROUP REAL ESTATE PROFESSIONALS
வீடு வாங்க விற்க!
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
உதயன் சிவராஜா
ROYAL LEPAGE ignite
795 MILNER AVE, TORONTO, ON M1B 3C3

DOMINION LENDING CENTRES
✓FIRST MORTGAGE
✓SECOND MORTGAGE
✓REFINANCE
SUJAN SIVARAJAH MORTGAGE AGENT LEVEL 1 416.302.5555

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரம் ஒருமுறை இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage Independently Owned and Operated
Raj Perampalam Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
• Family sponsorship.
• Super visa for parents and grandparents including health insurence,
• Citizenship;
• Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

உதயம் 1584 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday August 14, 2026

# யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கொலைகளை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் வேதநாயகன் உத்தரவு!

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக் காலமாக தவறான முடிவெடுத்து உயிரிழக்கும் சம்பவங்கள் கவலைக்கிடமாக அதிகரித்து வருகின்ற நிலையில், அவற்றைத் தடுப்பதற்கான துரித நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிப்பதுடன், அதற்கான ஒருங்கிணைந்த கட்டமைப்புகளை மீளச் செயற்பாட்டு நிலைக்குக் கொண்டுவர விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை வழங்கினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 11ம் திகதி திங்கட்கிழமை அன்று (11.08.2026) மாலை நடைபெற்ற விசேட உயர்மட்ட கலந்துரையாடலின் போதே ஆளுநர் இந்தப் பணிப்புரையை வழங்கினார். (தொடர்ச்சி 9ம் பக்கம்)



# "கானா" எனும் இசையை ரொறன்ரோ நகரில் "தெறிக்க" விடுவதற்காக கனடா வந்துள்ள "தேனிசைத் தென்றல்" தேவாவும் அவர் குழுவினரும்!






எதிர்வரும் 15-08-2026 சனிக்கிழமையன்று 8100 **Steels Avenue East- Markham** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **MARKHAM MEADOW** திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ள "தேனிசைத் தென்றல்- **Live in Concert** என்னும் மாபெரும் இன்னிசை நிகழ்ச்சியில் கலந்து கலந்து கொண்டு "கானா" எனும் இசையை ரொறன்ரோ நகரில் "தெறிக்க" விடுவதற்காக கனடா வந்துள்ள "தேனிசைத் தென்றல்" தேவாவும் அவர் குழுவினரும் 12ம் புதன்கிழமையன்று காலை ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கினார்கள்இ அத்துடன் நேற்று 13ம் கதி வியாழன் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தேனிசைத் தென்றல் தேவா குழவினர் மற்றும் பாடக பாடகிகள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் விமான நிலையத்தில் அவர்கள் வரவேற்கப்படுவதையும் காணலாம். (தொடர்ச்சி 5ம் பக்கம்)

COMMERCIAL REAL ESTATE
BUY · SELL · LEASE
• Retail & Office Spaces
• Investment Properties
• Commercial Leasing
• Land & Development Opportunities
Sri Nada rajasundram
Real Estate Broker
416-276-6666
RE/MAX ACE
Let's Talk Strategy.
Your Next Commercial Move Starts Here

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கிகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை தேவேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East (2nd Flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

G.Rajah
முள்ளிவாய்க்காலில் இருந்து...
NAM THAYAGAM
நம் தாயகம் INC
Nam Thayagam Inc.
3031, Markham Road, Unit #35, Scarbrough, ON M1X 1L9
namthyakam@gmail.com
416 558 2111

ரொறன்ரோ

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி



4 வயது (Junior Kindergarten) முதல் 14 வயது (8 ம் வகுப்பு) வரையிலான மாணவர்களுக்கான

# தமிழ், சமய, பண்ணிசை

## வகுப்புக்கள் 13.09.2026 ஆரம்பம்

எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, தியானம், நற்பழக்கம், இறைவழிபாடு ஆகியவற்றை எமது குழந்தைகள் அறிந்து அதன்படி ஒழுக வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி கடந்த 20 வருடங்களாக சிறப்புற நடைபெற்றுவருகின்றது.

**புதிய மாணவர்களுக்கான விண்ணப்பப் பதிவினை www.varasiththi.com இணையத்தளத்தில் மேற்கொள்ளலாம். நேரடியான பதிவு 22.08.2026 சனிக்கிழமை இந்துக்கல்லூரியில் காலை 10:00 மணிமுதல் 1:00 மணிவரை நடைபெறும்.**




**வகுப்புக்கள் நடைபெறும் நேரம்**

ஞாயிற்றுக்கிழமை காலை 9:15 முதல் 12:45 வரை

ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:15 முதல் 4:45 வரை




**Tamil - Hinduism - Pannisai**

**Sri Varasiththi Vinaayagar Hindu College**

3039 KENNEDY ROAD, SCARBOROUGH, ON M1V1S7

416.291.7900, 647.336.3333, 416.291.8500

WWW.VARASITHTHI.COM VARASITHTHI@GMAIL.COM VARASITHTHI



# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்-ரொறன்ரோ

SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO

3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3

## ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்பாள் அலங்கார உற்சவம்

## 14.08.2028 வெள்ளி முதல் 23.08.2026 ஞாயிறு வரை



மாணவர்கள் கல்வி, கலைகளில் சிறப்படையவும், வயோதிபர்கள் தேகதிட ஆரோக்கியம் பெறவும், திருமண வயதில் உள்ளவர்கள் திருமணபாக்கியம் பெறவும், குடும்பத்தில் பிரிவினைகள், சச்சரவுகள் நீங்கி குடும்ப அன்னியோனியம் பெற்று சந்தோசத்துடன் வாழவும். தம்பதிகள் சந்தான பாக்கியம் [குழந்தைச் செல்வம்] பெறவும். நோய், துன்பங்களில் அல்லல்படுவோர் ஆரோக்கியம் பெறவும். உலக அமைதி சமாதானத்துடன், தாயகத்தில் நிரந்தர அமைதியும் சுபீட்சமும் பெறவும். அனைவரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று மகிழ்வான வாழ்வு வாழவும் வேண்டி 10 தினமும் மாலை 6:40 மணிக்கு நடைபெறும் விசேட ஹோமம் மற்றும் அடியார்கள் பங்குகொள்ளும் குங்கும அர்ச்சனை ஆகியவற்றில் பங்கு பற்றி இறையருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

| கைலாச வாகனக்காட்சி | சப்பற அலங்காரக் காட்சி | தேர் அலங்காரக் காட்சி |
|---|---|---|
| 14.08.2026 வெள்ளி | 21.08.2026 வெள்ளி | 22.08.2026 சனிக்கிழமை |
| மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப | மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப | காலை 8:30 மணிக்கு வசந்தமண்டப |

## 21.08.2026 வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம்

## சுமங்கலி பூஜையும் திருவிளக்குப் பூஜையும்



காலை 7:30 மணிமுதல் வரலட்சுமி விரத தினத்தை முன்னிட்டு ஸ்ரீ மகாலட்சுமிக்கு 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும், சப்பறத் திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்மனுக்கு நவகலச அபிஷேகமும் விஷேட பூஜைகளும் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 5:00 மணிக்கு சாயரட்சைப் பூஜையும், தொடர்ந்து சுமங்கலிப் பிரார்த்தனையும் திருவிளக்குப் பூஜையும், தொடர்ந்து 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், வரலட்சுமி விரத நூல் கட்டுதல் என்பன நடைபெறும்.

**திருவிளக்குப் பூஜையில் பங்கு பற்றும் அடியார்கள் முற்கூட்டியே ஆலயத்தில் பெயர்களைப் பதிவு செய்வதுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.**

416.291.8500 vinaayagar.com vinaayagar

# உதயன் கதிரோட்டம்

## யூலைப் படுகொலைகளின் நாற்பத்தி மூன்றாவது ஆண்டை, உணர்வுகளைப் பகிர்ந்த வண்ணம் நாம் கடந்தாலும் தொடர்ச்சியான கடமைகள் உள்ளதையும் அறிவோம்!

யூலை 1983 என்னும் அந்த “கொடிதானதும் துயரும் பயங்கரமும் நிறைந்த அந்த காலப்பகுதியில் இடம்பெற்ற அனர்த்தங்களையும் இழப்புக்களையும் நினைவில் நிறுத்தி இந்த யூலை மாதத்தின் இறுதி நாளை நாம் இன்று அடைந்துள்ளோம். எனினும் இந்த யூலை கொடுமைகளை மறந்து விடாமல் மனதில் நிறுத்தி அந்த நினைவுகளுடன் நாம் எப்போதும் ஒன்றியிருப்போம் என்று உறுதியும் எடுத்துக் கொள்வோம்.

தற்கால உலக அரசியலில் இனம் மற்றும் மொழிகளின் அடிப்படையில் மக்களை கூறுபோடுவதில் அரசியல்வாதிகள் தங்கள் காய்களை நகர்த்திய வண்ணம் தங்கள் பதவிகளை எப்போதும் தக்கவைத்துக் கொள்ளவே முயல்வார்கள். குறிப்பாக முதலாளித்துவப் போக்குள்ள அரசியல்வாதிகள் அந்த தேசத்தின் மக்களில் விவசாயிகளாகவும் தொழிலாளர்களாகவும் உள்ள மக்களை இனம் மற்றும் மதம் சார்ந்து பிரித்து வைப்பதே தங்கள் முதற்பணி என்பதை கவனித்துச் செய்வார்கள்.

அவ்வாறு தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அவர்களை மதம் மற்றும் மொழி சார்ந்து பிரிந்து நிற்கச் செய்தால் தொழிலாளர் மற்றும் விவசாயிகள் போராட்டம் என போராடும் சக்தியை அந்த உழைக்கும் வர்க்கம் குறைத்துக் கொள்ளும் என்ற உண்மையை முதலாளித்துவம் சார்ந்து தங்கள் அரசியலை நகர்த்திச் செல்லும் அரசியல்வாதிகள் உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

இவ்வாறான ஒரு அரசியல் காய் நகர்த்தல்களே இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் அரசியல் முதலாளித்துவ அரசியல்வாதிகள் கையில் எடுத்துக் கொண்ட ஆயுதமாக விளங்கியது. இதனால் தான் இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்னர் உழைக்கும் மக்கள் என்ற ஒரே வர்க்கமாக தங்கள் உரிமைகளுக்காக போராடியவர்கள் பின்னாளில் மொழிசார்ந்தும் மதம் சார்ந்தும் பிரித்தாளப்பட்டார்கள். இதன்” விளைவாக இலங்கையில் இனவாதம் இருப்பக்கங்களிலும் பிரயோகிக்கப்பட நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இவ்வாறான திட்டமிட்ட பிரித்தாளும் தந்திரத்திரத்தில் முக்கியமானவர்களாக விளங்கிய டி. எஸ் சேனநாயக்க மற்றும் எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்க அடங்கிய பல சிங்கள தேசிய அரசியல்வாதிகளோடு தமிழ் அரசியல்வாதிகளும் கைகோர்த்து நின்றார்கள் என்பதை சாதாரண தமிழ் மற்றும் சிங்கள மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இதனால் அவர்களும் இனவாதச் சேற்றில் அள்ளுண்டு செல்லவேண்டியவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

இவ்வாறாக இயற்கை வளங்களையும் சாதகமான கால நிலையையும் கொண்ட இலங்கைத்தீவில் அமைதி இன்மை ஏற்பட இனவாதம் காரணமாக விளங்கியது. பெரும்பான்மை இன சிங்கள மக்களை திருப்திப் படுத்தும் வகையில் சிங்களத் தலைவர்களின் தலைமையில் இயங்கிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி பதவிக்கு வந்து மாணவர்களின் பல்கலைக் கழக பிரவேசத்தில் தரப்படுத்தலை அறிமுகம் செய்தது. இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் சாத்வீகப் போராட்டங்களை ஆரம்பித்தார்கள். குறிப்பாக தமிழ் மாணவர் பேரவை” போன்ற மாணவர்களின அமைப்புக்கள் போராட்டங்களை நடத்துவதற்காக மாணவர்களையும் பொது மக்களையும் ஒன்று திரட்டினார்கள். அப்போது அந்தப் போராட்டங்களை அடக்கும் வகையில் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் கைதுகள் ஆகியவற்றைச் செய்ய இலங்கைப் பொலிசாருக்கு அரசாங்கங்கள் அழுத்தங்கள் கொடுக்கத் தொடங்கின. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் மாணவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளா டேவிற்சன் மற்றும் பொன் சிவகுமாரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இவ்வாறான மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் போராட்டங்களே பின்னாளில் ஆயுதங்கள் ஏந்திய போராட்டங்களாகவும் தாக்குதல்ககளாகவும் மாற்றம் பெற்றன. இந்த மாற்றங்களை தமிழ் மக்களும் வரவேற்று தங்கள் ஆதரவை வழங்கினார்கள். தமிழ் மக்களுக்காக விடுதலையைப் பெற்றுக்கொள்ள் “ஆயுதப் போராட்டம்” ஒன்றே உகந்தது என்பதை மக்களும் மாணவர்களும் இளைஞர்களும் ஏற்றுக்கொணடார்கள்.

இந்த போராட்ட வடிவத்தின் வளர்ச்சியானது 1983ம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடத்தப்பெற்ற தாக்குதலில் 23 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட இந்த சம்பவம் சிங்கள அரசியல்வாதிகள் பலரையும் சில தமிழ் அரசியல்வாதிகளையும் அதிரச் செய்தது. சிங்கள இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டதற்கு இனவாத சாயம் பூசப்பட்டு பின்னர் அது இனக்கலவரமாக வெடித்தது. அந்தக் காலப்பகுதியில் சுமார் ஒரு வார காலத்திற்கு இலங்கை எங்கும் நடத்தப்பெற்ற இனவாதக் கொலைகளே இன்றும் நாம் 43 வது ஆண்டாக நினைவு கூர்கின்ற ஒரு துயரங்கள் நிறைந்த நினைவுகளாக எம்மோடு பயணிக்கின்றது. பின்னரும் தொடர்ச்சியாக நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு இரையாகிப் போன எம் உறவுகளை நாம் உருக்கத்துடன் நினைவு கூறும் இந்த யூலைப்டுகொலை அனுஸ்டிப்பை நாம் அனைவரும் உணர்வுகளைப் பகிர்ந்து கடந்து செல்வோம்!

Canada — We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 — Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com





## Room for Rent

**McCowan & 401** அருகில், **Luxury 2 Bed, 2 Bath Condo** ல் ஒரு தனி அறை **with separate bathroom, Aug 1, 2026** முதல் வாடகைக்கு உள்ளது. **Share the kitchen & living area with a Tamil senior male. Gym, Swimming pools, Tennis, BBQ area, and more. Preference given to single Tamil male. Contact. 647 273 2053**

## வேலை வாய்ப்பு

தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. தொடர்புகளுக்கு: 647-669-2739

## Line Cook wanted for an Italian Restaurant

**Toronto** நகரில் **Church** வீதி / **Wellesley** வீதி சந்திப்புக்கு அருகில் உள்ள இத்தாலிய உணவகம் ஒன்றிக்கும் உடனடியாக **Line Cook** ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு **Kumar** 416 409 9450 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

## இளவயது ஆண் ஒருவரைப் பராமரிக்க உதவியாளர் தேவை

சிறப்புத் தேவைகள் (SPECIAL NEEDS) கொண்ட 26 வயதுடைய ஆண் ஒருவரைப் பராமரிக்கவும் கவனித்துக்கொள்ளவும் ஆண் ஒருவர் தேவை. அவருடன் வீட்டிலேயே தங்கியிருந்து தினசரித் தேவைகளுக்கு உதவி செய்து அன்புடனும் பொறுமையுடனும் கவனித்துக் கொள்ளக் கூடிய ஒருவரையே நாம் எதிர்பார்க்கின்றோம். தகுதியும் அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் நல்ல சம்பளமும் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் 416.892.3249 என்னும் தொலைபேசி இலக்கத்தில் அழைக்கவும். அழைப்பு கிட்டாவிட்டால் தங்கள் தொலைபேசி இலக்கத்தைப் பதிவு செய்தால் உதவியாக இருக்கும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ் பேசும் அரசியல் கைதிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துங்கள் என மு.கோமகன் வலியுறுத்து!

பு. கஜிந்தன்



இலங்கை சிறைச்சாலைகளில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகளால் தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் மிகுந்த அச்சத்தின் மத்தியில், 9ம் திகதி சனிக்கிழமை அன்றையதினம் கொழும்பு மகசின் சிறைச்சாலை மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளுக்கு சென்று தமது பிள்ளைகளை பார்வையிட்டனர். இதன்போது குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளரும் முன்னைநாள் அரசியல் கைதியுமான முருகையா கோமகனும் உடனிருந்தார்.

இது குறித்து முருகையா கோமகன் கருத்து தெரிவிக்கையில், தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள புதிய மகசின் சிறைச்சாலையில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கே ஒரு மரணமும் சம்பவித்தது. அங்கே தமிழ் அரசியல் கைதிகள் நால்வர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதேபோல வெலிக்கடை சிறைச்சாலையிலும் தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அந்த சிறைச்சாலைகளில் தற்போது பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும் அரசியல் கைதிகளின் பாதுகாப்பு என்பது தொடர்ச்சியாக கேள்விக்குறியாகத்தான் உள்ளது. கடந்த காலங்களில் அரசியல் கைதிகளுக்கு சிறைகளில் இடம்பெற்ற சம்பவங்களை நினைக்கும்போது அச்சம் கொள்ள தோன்றுகிறது. பெற்றோரும் அங்கு உள்ள கைதிகளும் அச்சமான சூழ்நிலையில் உள்ளார்கள்.

இந்த நிலையை கருத்தில் கொண்டு சிறையில் நீண்ட காலமாக இருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். அதேவேளை அவர்களுடைய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டது. அத்துடன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட இந்த விடயம் குறிப்பிடப்பட்டது.

இந்த விடயத்தை எம்மிடம் நினைவுபடுத்திய அரசியல் கைதிகள், இது குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லுமாறும், தமது விடுதலையை உறுதிப்படுத்துமாறும் கூறியுள்ளனர்.

எனவே இதனை கருத்தில் கொண்டு அரசாங்கமானது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். அதேவேளை தமிழ் மக்களது வாக்குகளை பெற்று பதவிக்கு வந்தவர்கள் வெறுமனே பார்வையாளர்களாக இருக்காமல் அவர்களது விடுதலைக்காக அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அரசியல் கைதிகள் தொடர்பான விடயத்தை கையாள்வதற்காக ஒரு குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் அறிக்கைகள் ஏற்கனவே நீதி அமைச்சுக்கு வழங்கப்பட்டது. ஆனால் அதற்குரிய நடவடிக்கை தாமதப்படுத்தப்படுகிறது.

அசம்பாவிதங்களை கட்டுப்படுத்துவதற்கு, அந்த குழு முன்வைத்த விடயங்களை விரைந்து நடைமுறைப்படுத்தினால் ஆரோக்கியமானதாக இருக்கும். அந்த குழுவின் அறிக்கைக்குள் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதேவேளை ஏனைய குற்றச்சாட்டுகளின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய கைதிகளை சிறைச்சாலை கட்டளை சட்டத்தின் ஊடாக புனர்வாழ்வுக்கு உட்படுத்தியோ, அவர்களது நன்னடத்தை அடிப்படையிலேயோ விடுதலை செய்து, அவர்களும் அவர்களது உறவுகளுடன் சேர்ந்து வாழ வழி செய்ய வேண்டும்.

அவர்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். குடும்பத்துடன் மீண்டும் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் இருக்கின்றார்கள். நாங்களும் சிறையில் வாடியவர்கள் என்ற ரீதியில் எமக்கு அதன் வேதனை தெரியும். எனவே அரசாங்கம் இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.




# கண்காணிப்பு கமராவை சேதப்படுத்தியவர்களிடம் தண்டம் அறவிட்ட நல்லூர் பிரதேச சபை!

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பல்வேறு பகுதிகள் கண்காணிப்பு கமராக்கள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சட்டவிரோதமாக வீதிகளில் கழிவுகளை வீசிச் செல்பவர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களிடம் இருந்து தண்டப்பணம் அறவிடும் நடவடிக்கைகளும் நல்லூர் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக வீதிகளில் கழிவுகளை வீசிவிட்டுச் செல்வோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. இந்நிலையில், நந்தாவில் அம்மன் கோவில் பகுதியில் நல்லூர் பிரதேச சபையினால் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமரா ஒன்று அண்மையில் சிலரினால் அடித்து நாசமாக்கப்பட்டது.

எனினும், அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த ஏனைய கண்காணிப்பு கமராக்களின் பதிவுகளைப் பயன்படுத்தி குறித்த நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதனையடுத்து, சேதப்படுத்தப்பட்ட கண்காணிப்பு கமராவின் பெறுமதியுடன் தண்டப்பணத்தையும் சேர்த்து ரூபா 80,000 தொகையை குறித்த நபர்களிடமிருந்து நல்லூர் பிரதேச சபையினால் அறவிடப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தை சேர்ந்தோரிடம் வெளிநாட்டு ஆசைகாட்டி கடந்த சில வாரங்களுக்குள் ஏழரைக்கோடி ரூபா மோசடி செய்யப்பட்டது!




வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து, யாழ்ப்பாணத்தை சேர்ந்தோரிடம் கடந்த சில வாரங்களுக்குள் ஏழரைக் கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை மோசடி செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து யாழ். மாவட்டத்தில் பண மோசடி செய்யும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான நிலையிலேயே கடந்த சில வாரங்களாக இத்தகைய மோசடிகள் சடுதியாக அதிகரித்துள்ளன என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக 10 முறைப்பாடுகளும் பதிவு செய்யப் பட்டுள்ளன. அதிகபட்சமாக நபரொருவர் ஒன்றரைக் கோடி ரூபாவை இழந்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களில் வெளியாகும் போலியான விளம்பரங்களை நம்பியே பெருமளவானோர் பணத்தை இழந்துள்ளனர். கனடா, பிரிட்டன் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகவே அந்த விளம்பரங்கள் அமைந்துள்ளன.

எந்தச் செலவும் இல்லாமல் வெளிநாடுகளுக்குச் செல்லலாம்" என்றவா றாக அமைந்துள்ள விளம்பரங்களை நம்பி பொதுமக்கள் அவர்களைத் தொடர்பு கொள்ளுகின்றனர். காலப் போக்கில் மக்களின் நம்பகத்தன்மையைப் பெறும் மோசடியாளர்கள் அவர்களின் வங்கித் தரவுகளைப் பெற்றுக் கொள்கின்றனர். அதன் பின்னர் ஒரு தொகைப் பணத்தை வங்கியிலிட்டுக் காட்டுமாறு கூறிவிட்டு கடவுச்சொல்லைத் திருடி நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் இந்த மோசடியில் ஈடுபடுகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வாறான மோசடியாளர்களிடம் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.



# சித்தாண்டியிலிருந்து செல்வச்சந்நிதியை சென்றடைந்த 60க்கும் மேற்பட்ட கிழக்கிலங்கை யாத்திரிகர்கள்!

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டி வேலோடு மலை முருகன் ஆலயத்திலிருந்து அறுபதுக்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் ஆன்மீக பயணமாக 12ம் திகதி அன்று 12.08.2026 புதன்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் - தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தை சென்றடைந்துள்ளனர்.

சித்தாண்டி வேலோடு மலை முருகன் ஆலய ஆதீன கர்த்தாவான சுப்பிரமணியம் தியாகராஜா தலைமையில் கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை சித்தாண்டியில் இருந்து பேருந்து மூலம் ஆன்மீக யாத்திரைப் பயணத்தை ஆரம்பித்த அவர்கள் மாலை யாழ். காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன் கோவிலுக்கு வருகை தந்தனர்.

11 ஆம் திகதி அதிகாலை காரைநகர் சிவன் ஆலயத்தில் இருந்து பாதயாத்திரையாக பொன்னாலை வழியாக கடற்கரை பாதையூடாக பல்வேறு ஆலயங்களையும் தரிசித்துக் கொண்டு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தினை வந்தடைந்தனர்.

கீரிமலையில் இருந்து அன்று 12 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு பாதயாத்திரையாக புறப்பட்டு மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தை தரிசித்துக் கொண்டு காலை தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தினை வந்தடைந்துள்ளனர்.

13ம் திகதி அன்று நள்ளிரவு இடம்பெறும் தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய கொடியேற்றத்தினை தரிசித்து தங்கள் ஆன்மீகப் பயணத்தை முடித்துக் கொண்டு பேருந்தில் கிழக்கு மாகாணம் திரும்புகின்றனர்.

குறித்த பாதயாத்திரை தொடர்பில் சித்தாண்டி வேலோடு மலை முருகன் ஆலய ஸ்தாபகரான சுப்பிரமணியம் தியாகராஜா அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்திலிருந்து வடக்கு மாகாணம் நோக்கிய இந்த ஆன்மீகப் பயணமானது மிகவும் முக்கியமானது. நாங்கள் குழுவாக வருடந்தோறும் ஆறுக்கும் மேற்பட்ட சைவ யாத்திரைகளை மேற்கொள்கின்றோம். எங்கள் குழுவில் வயதானவர்களில் இருந்து மிக இளவயதுடையவர்கள் வரை ஆண்கள், பெண்கள் எனப் பலரும் ஆர்வமுடன் கலந்து கொண்டுள்ளனர். இப்படியான ஆன்மீகப் பயணங்கள் மூலமாக குறிப்பாக இளையோர்கள் சைவ வாழ்வியலையும், பண்பாட்டையும் நேரடியாக உணர்ந்து அறிந்து கொள்வது மகிழ்ச்சியளிப்பதுடன், மனதையும் உடலையும் புத்துணர்வாக்கவும் இந்தப் பயணம் அமைந்திருப்பது கூடுதல் சிறப்பானதாகும்.

# "கானா" எனும் தென்றலை ரொறன்ரோ நகரில் "தெறிக்க" விடுவதற்காக கனடா வந்துள்ள "தேனிசைத் தென்றல்" தேவாவும் அவர் குழுவினரும்

கனடிய செய்திகள்
Canadian News




எதிர்வரும் 15-08-2026 சனிக்கிழமையன்று 8100 Steels Avenue East, Markham என்னும் விலாசத்தில் அமைந்துள்ள MARKHAM MEADOW திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ள "தேனிசைத் தென்றல் - Live in Concert" என்னும் மாபெரும் இன்னிசை நிகழ்ச்சியில் கலந்து கலந்து கொண்டு "கானா" எனும் தென்றலை ரொறன்ரோ நகரில் "தெறிக்க" விடுவதற்காக கனடா வந்துள்ள "தேனிசைத் தென்றல்" தேவாவும் அவர் குழுவினரும் 12ம் புதன்கிழமையன்று காலை ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கினார்கள்.

தனது இசைப் பட்டாளத்தில் பாடகர்கள் மற்றும் இசைக் கலைஞர்கள் ஆகியோர் உட்பட சுமார் 25 கலைஞர்களை "தேனிசைத் தென்றல்" தேவா இங்கு அழைத்து வந்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தக் குழுவில் தேவா அவர்களின் புதல்வர் ஸ்ரீகாந்த் தேவாவும் அடங்கியுள்ளார் என்பதும் பாடகர் மனோ மற்றும் பாடகி அனுராதா ஸ்ரீராம் உட்பட பல முன்னணிப் பாடக பாடகிகள் இந்தக் குழுவில் அடங்கியுள்ளார்கள்.





இவர்களது அட்டகாசமான பாடல்களையும் பார்த்தும் கேட்டும் ரசிக்கும் சந்தர்ப்பம் நமது ரொறன்ரோ ரசிகப் பெருமக்களுக்கு கிட்டியுள்ளது.

12ம் திகதி புதன்கிழமை ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கிய "தேனிசைத் தென்றல்" தேவாவும் அவர் குழுவினர் அனைவரும் அங்கு அவர்களை வரவேற்க வந்திருந்த விழா ஏற்பாட்டாளர்டகளில் சிலரான மயூரன் தனபாலன் - ரவி கனகசபை - மற்றும் சங்கர் உட்பட பலர் அனைவரையும் மாலைகளும் பூக்கொத்துகளும் வழங்கிக் கௌரவித்தார்கள்.

அங்கு குழுமியிருந்த பத்திரிகை ஆசிரியர் மற்றும் சமூக ஊடகங்களின் பிரதிநிதிகள் மற்றும் புகைப்படப்பிடிப்பாளர்கள் ரசிகர்கள் அனைவரும் "தேனிசைத் தென்றல்" தேவாவும் அவர் குழுவினரும் வந்திறங்கிய அந்த தருணத்தை கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

கனடா உதயன் உட்பட பல ஊடகங்கள் நேரடி ஒளிபரப்பையும் தங்கள் சமூக ஊடகத் தளங்கள் ஆகியவற்றின் ஊடாக இசை ரசிகர்களுக்கு கொண்டு சென்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


அனுமதிச் சீட்டுக்களுக்கும்ய விபரங்களுக்கும் (647) 600-5297 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

*- UTHAYAN LJI Journalist Ganesh -*









இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிழக்கின் மட்டக்களப்பு – மாமாங்கேஸ்வரர் ஆலய "தேர்" திருவிழவில் விண்ணைப் பிளந்த பல்லாயிரக்கணக்கானபக்தர்களின் "அரோகரா" கோஷம்!

கனகராசா சரவணன்





கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலமான மட்டக்களப்பு அருள்மிகு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் திராவிட முகப்புத்திர சிறப்புத் தேர் உற்சவம், 11-08-2026 அன்று செவ்வாய்க்கிழமை காலை 6.50 மணியளவில் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ வெகுவிமர்சையாக நடைபெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட கிரியை வழிபாடுகளைத் தொடர்ந்து வசந்த மண்டப பூஜையும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் "அரோகரா" கோஷத்திற்கு மத்தியில் அலங்கரிக்கப்பட்ட தேரில் எழுந்தருளி மாமாங்கேஸ்வரர் அருள்பாலித்தார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பெருமைகளையும் ஒருங்கே கொண்ட இவ்வாலயத்தின் மஹோற்சவமானது கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இன்று காலை விநாயகர் மற்றும் கொடித்தம்பத்திற்கு விசேட பூஜைகள் நடத்தப்பட்டு, பஞ்சமுக விநாயகருக்கு வசந்த மண்டபத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா சிறப்பாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து வெளிவீதியில் பஞ்சமுக விநாயகர் தேரில் ஆரோகணிக்க, அங்கு விசேட பூஜைகள் நடத்தப்பட்டு ஆயிரக்கணக்கான பெண் மற்றும் ஆண் பக்தர்கள் வடமிழுக்கத் தேர் உற்சவம் கோலாகலமாக நடைபெற்றது.

ஸ்ரீ ராமபிரானால் வழிபடப்பட்ட ஆலயம் என்ற பெருமையினையும், பிதுர்க்கடன் தீர்க்கும் புனிதத் தீர்த்தக் கேணியைக் கொண்ட தலமென்ற புகழினையும் உடையதாக இம்மாமாங்கேஸ்வரர் ஆலயம் விளங்கி வருகின்றது.

இவ்வாலயத்தின் ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவம் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் வரலாற்றுச் சிறப்புமிக்க மாமாங்கேஸ்வரர் தீர்த்தக் கேணியில் நடைபெறவுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான தனது நடவடிக்கைகள் இலக்கு வைத்து செய்யப்பட்டவை அல்ல என்கிறார் ஆளுநர்!



வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் மேற்கொண்ட நடவடிக்கைகள் எந்தவொரு தனிநபரையும், அரசியல் கட்சியையும் அல்லது எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்தையும் இலக்காகக் கொண்டவை அல்ல எனத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், மக்கள் ஒப்படைத்துள்ள பொறுப்பையும், நிர்வாகத்தின் மீதான அவர்களது நம்பிக்கையையும் பாதுகாப்பதே தமது நடவடிக்கைகளின் ஒரே நோக்கம் என வலியுறுத்தினார். ஒரு நல்ல நிர்வாகியின் கடமை எப்போதும் பாராட்டைப் பெறுவது அல்ல, மக்களின் நீண்டகால நலனுக்காகத் தேவையானபோது கடினமான முடிவுகளையும் எடுப்பதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த "மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதில் உள்ளூராட்சி மன்றங்களின் பங்கு மற்றும் பொறுப்புகள்" தொடர்பான பயிற்சி நிகழ்வு 13ம் திகதி அன்று (13.08.2026) வியாழக்கிழமை கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஆரம்பக் கருத்துரையை வழங்கினார்.

அரசாங்கத்துடனான மக்களின் முதலாவது தொடர்பு பல சந்தர்ப்பங்களில் உள்ளூராட்சி மன்றங்களுடனேயே ஏற்படுவதால், அவற்றின் செயற்பாடுகள் மீதான மக்களின் அனுபவமே அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையையும் தீர்மானிக்கிறது என ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

ஒவ்வொரு உரிமைக்கும் எதிர்ப்புறமாக ஒரு கடமை இருப்பதாகத் தெரிவித்த அவர், மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது நிர்வாகத்தின் பொறுப்பு என்றும், அதிகாரம் இருப்பதுடன் அதனை நியாயமாகப் பயன்படுத்தும் கடமையும் இருப்பதாகவும் கூறினார். உள்ளூராட்சி மன்றங்கள் தமது கடமைகளை நேர்மையாக நிறைவேற்றும்போது, மனித உரிமைகள் தனியான ஒரு கோட்பாடாக இல்லாமல் அன்றாட சேவைகளிலேயே வெளிப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். கழிவுகளை அகற்றுதல், சுத்தமான குடிநீர், பாதுகாப்பான வீதிகள், ஒழுங்குபடுத்தப்பட்ட நகரங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமமான நிர்வாகம் ஆகிய அனைத்தும் மனித உரிமைகளின் நடைமுறை வெளிப்பாடுகளே என அவர் தெரிவித்தார்.

ஜனநாயகம் என்பது ஒருவர் விரும்பியதைச் செய்வதற்கான உரிமை மட்டுமல்ல, சட்டத்துக்குள் இருந்து மக்களுக்கு சேவை செய்வதற்கான பொறுப்பு என்றும் ஆளுநர் வலியுறுத்தினார். கருத்துச் சுதந்திரம் பொறுப்பற்ற முறையில் எதையும் கூறுவதற்கான சுதந்திரமல்ல, உண்மையைப் பொறுப்புடன் வெளிப்படுத்துவதே உயர்ந்த ஜனநாயகப் பண்பாடு எனவும் அவர் தெரிவித்தார். கருத்துக்களில் வேறுபாடுகள் இருக்கலாம் ஆனால் உண்மையில், சட்டத்தில் மற்றும் மக்களின் நலனில் வேறுபாடு இருக்கக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில மாதங்களாக உள்ளூராட்சி மன்றங்கள் சட்டத்தையும் நடைமுறைகளையும் முறையாகப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகத் தெரிவித்த ஆளுநர், இது யாரையும் கட்டுப்படுத்துவதற்கான முயற்சி அல்ல, உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை மேலும் மதிப்புமிக்கதாக்குவதற்கான நடவடிக்கையாகும் என்றார். அதிகாரம் என்பது பொறுப்பின்றிப் பயன்படுத்தக்கூடிய சலுகையல்ல, அது மக்களின் நம்பிக்கையின் மீது ஒப்படைக்கப்பட்டுள்ள பொது பொறுப்பு என அவர் சுட்டிக்காட்டினார்.

குடிபுகு சான்றிதழ் வழங்கும் நடைமுறையை எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்ட அவர், அது ஒரு சாதாரண நிர்வாக ஆவணம் அல்ல, கட்டடங்கள் சட்டபூர்வமாகவும் பாதுகாப்பாகவும் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய நிலையிலும் உள்ளன என்பதை உறுதிப்படுத்தும் பொதுநம்பிக்கைச் சான்றிதழாகும் எனத் தெரிவித்தார். முறையான சான்றிதழ்கள் இன்றி இயங்கும் வர்த்தக நிறுவனங்களால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கிடைக்க வேண்டிய வருவாயும் பாதிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். நகரத் திட்டமிடல் விதிகளைப் பின்பற்றாமை மற்றும் போதிய வாகனத் தரிப்பிட வசதியின்மை ஆகியவை நகரப் போக்குவரத்து நெரிசலுக்கும் மக்களின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரமான நடமாட்டத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு உள்ளூராட்சி மன்றங்களிடமே இருப்பதாகத் தெரிவித்த ஆளுநர், சட்டம் அனைவருக்கும் சமமாகப் பொருந்த வேண்டும் என்றும், அரசியல் அழுத்தங்களுக்கோ தனிப்பட்ட செல்வாக்குகளுக்கோ இடமளிக்காமல் சட்டத்தையே வழிகாட்டியாகக் கொண்டு செயற்படுமாறும் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். அதேவேளை, சட்டத்துக்குட்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கும், உள்ளூராட்சி மன்றங்களின் நிலையான வருவாயை அதிகரிக்கும் முயற்சிகளுக்கும் தமது முழுமையான ஆதரவு தொடரும் எனவும் அவர் உறுதியளித்தார்.

மக்களின் நலனே உள்ளூராட்சி நிர்வாகத்தின் மையமாக இருக்க வேண்டும் என வலியுறுத்திய ஆளுநர், உள்ளூராட்சி மன்றத்தின் வெற்றி அது அமைக்கும் கட்டடங்களின் எண்ணிக்கையிலோ, செலவிடும் நிதியின் அளவிலோ அல்ல, ஒரு சாதாரண குடிமகனின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் நேர்மறையான மாற்றத்திலேயே அதன் உண்மையான வெற்றி அளவிடப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். மக்கள் அதிகாரத்தை வழங்கவில்லை, பொறுப்பை வழங்கியுள்ளனர். பதவியை வழங்கவில்லை, நம்பிக்கையை வழங்கியுள்ளனர். அந்த நம்பிக்கையைப் பாதுகாப்பதே அனைவரின் உயர்ந்த கடமை என அவர் வலியுறுத்தினார்.



இப்பயிற்சியில் வடக்கு மாகாணத்திலுள்ள மேயர்கள், பிரதி மேயர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆணையாளர்கள், செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் ஜி.புஞ்சிஹேவா, சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் கே.கபிலன் வில்லவராஜன், யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் மற்றும் விசாரணை மற்றும் புலனாய்வு பணிப்பாளர் லால் வீரசிங் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு அமர்வுகளை நடத்தினர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வடக்கில் 12,861 ஏக்கர் அரச மற்றும் தனியார் காணிகள் படையினர் வசம்! மாவட்டச் செயலகங்கள் எழுத்தில் உறுதிப்பாடு

- நடராசா லோகதயாளன்

வடக்கின் 5 மாவட்டங்களிலும் 12 ஆயிரத்து 861 ஏக்கர் நிலமே அரச மற்றும் தனியார் நிலங்கள் படையினர் வசம் உள்ளதாக மேற்படி மாவட்டச் செயலகங்கள் எழுத்து மூலம் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினர் வசம் உள்ள நிலத்தில் வலி. வடக்கில் உள்ள மக்களின் நிலத்தை மக்களிடமே மீள ஒப்படைக்குமாறு தொடர் போராட்டங்கள் இடம்பெறுவதனாலும் அரசியல்வாதிகளும் தொடர்ச்சியாக பங்கேற்பதனாலும் வலி.வடக்கு மட்டும் பேசு பொருளாக உள்ளது. தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபுலவும் பேசப்படும் இடத்தில் உள்ளது.

இதன் அடிப்படையில் மாவட்டங்களில் தற்போது எவ்வளவு அரச மற்றும் தனியார் நிலம் படையினர் வசம் உள்ளது என வடக்கின் 5 மாவட்டச் செயலகத்திற்கும் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்டது. அந்த விண்ணப்பத்திற்கு மாவட்டச் செயலகங்கள் எழுத்து மூலம் வழங்கிய பதிலின் அடிப்படையிலேயே இந்த எண்ணிக்கை குறிப்பிடப்படுகின்றது.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் படையினர் வசம் உள்ள மொத்தமாக உள்ள நிலம் 3440.78 ஏக்கர் எனவும் இதில் தனியார் காணிகள் 2,570.18 ஏக்கராகவும், அரச காணிகள் 870.60 ஏக்கர் உள்ளது எனவும் 2024 ஆம் ஆண்டிற்குப் பின்பு விடுவிக்கப்பட்ட நிலத்தின் அளவு 61.5 ஏக்கர் என மாவட்டச் செயலக தகவல் வழங்கும் உத்தியோகத்தர் பதிலளித்துள்ளார்.

இதேபோன்று மன்னார் மாவட்டத்தில் படையினர் வசம் 5,020.80 ஏக்கர் நிலம் உள்ளதோடு இதில் தனியார் காணிகள் 1236. ஏக்கராகவும், அரச காணிகள் 4,586 ஏக்கர் உள்ளது எனப் பதிலளித்துள்ளனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் வசம் மொத்தமாக உள்ள நிலம் 1478.5 ஏக்கர் எனவும் இதில் தனியார் காணிகள் 330. ஏக்கர், அரச காணிகள். 1148.5 ஏக்கர் எனப் பதிலளித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் படையினர் வசம் உள்ள மொத்த நிலங்களின் அளவானது 1222 ஏக்கர் என்றும் இதில் தனியார் காணிகள் 243.5.ஏக்கரும், அரச காணிகள் 978.5 ஏக்கர் என்றும் மாவட்டச் செயலக தகவல் வழங்கும் உத்தியோகத்தர் பதிலளித்துள்ளார்.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் 182.88 ஏக்கர் தனியார் காணிகளும் 714.6 ஏக்கர் அரச காணிகளுமாக மொத்தம் 897 ஏக்கர் நிலங்களே படையினர் வசம் உள்ளதாக தகவல் அறியும் சட்டத்தின் பீழ் எழுத்தில் செய்யப்பட்ட விண்ணப்பங்களிற்கு பதிலளிக்கப்பட்டது. இவற்றின் அடிப்படையிலேயே வடக்கில் 4 ஆயிரத்து 562.88 ஏக்கர் தனியார் காணிகளும், 8 ஆயிரத்து 298.20 ஏக்கர் அரச காணிகளுமாக மொத்தம் 12 ஆயிரத்து 861.08 ஏக்கர் நிலம் படையினர் வசம் இன்றும் உள்ளமை உறுதிப்படுத்தப்படுகின்து.

இதேநேரம் வடக்கில் பல காணிகள் படையினருக்கு என்றே முழுமையாக பாரதீனப்படுத்தப்பட்டு விட்டது. அதேபோன்று வன வளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களிற்குரிய பல ஆயிரம் ஏக்கர் நிலங்களில் படையினர் நிலை கொண்டுள்ளனர் அந்த அளவுகள் இவற்றிற்குற் உள் அடக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கைப் போர் காரணமாக ஆவணங்களின்றி இந்தியாவுக்குச் சென்று அகதிகளாக வாழும் இலங்கையர்கள், தாயகம் திரும்ப அமைச்சரவை ஒப்புதல்

போரின் காரணமாக முறையான ஆவணங்களின்றி இந்தியாவுக்குச் சென்று அகதிகளாக வாழும் இலங்கையர்கள், மீண்டும் தாயகம் திரும்புவதற்குத் தேவையான குடிவரவு தடையகற்றல் வசதிகளை வழங்குவதற்கு இலங்கை அரச-ின் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சரினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கே 11ம் திகதி திங்கட்கிழமை அன்று அமைச்சரவை இந்த ஒப்புதலை அளித்துள்ளது.

யுத்த காலத்தில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக, அங்கீகரிக்கப்பட்ட துறைமுகங்கள் மூலமன்றியும் முறையான கடவுச்சீட்டுகள் இன்றியும் இந்தியாவுக்குச் சென்ற பலர் அங்கு அகதிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தின் (UNHCR) ஊடாகத் தன்னார்வமாக மீண்டும் தாயகம் திரும்ப எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

இதனடிப்படையில், சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்கு அமையப் பின்வரும் தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் முறையான ஆவணங்களின்றி இந்தியாவுக்குச் சென்று, அங்குள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் இலங்கையர் என அடையாளப்படுத்தப்பட்ட நபர்களுக்கு, அரசு உளவுத்துறையின் தடையகற்றல் அறிக்கை பெறப்படும்.

இவர்கள் கொலை, தேசத்துரோகம் போன்ற கடுமையான குற்றங்களில் ஈடுபடாதவர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே நாட்டிற்குள் அனுமதிக்கப்படுவர்.

தொடர்புடைய நபர்களுக்குத் தற்காலிகப் பயண ஆவணங்கள் வழங்கப்பட்டு, 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாமல், அங்கீகரிக்கப்பட்ட வழிகள் ஊடாக நாட்டிற்குள் நுழைவதற்கு வாய்ப்பளிக்கப்படும்.



2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் யுத்தம் நிறைவடைந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்தவர்களுக்கும், அடையாளப் படுத்தல் மற்றும் உளவுத்துறை தடையகற்றல் அறிக்கையின் அடிப்படையில் சட்ட நடவடிக்கைகளின்றி நாட்டிற்குள் நுழையச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

அதேவேளை, கொலை மற்றும் தேசத்துரோகம் உள்ளிட்ட குற்றங்களுடன் தொடர்புடைய நபர்கள் அடையாளம் காணப்பட்டால், அவர்கள் துறைமுகம் அல்லது வானூர்தி நிலையத்திலேயே தடுத்து வைக்கப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தமிழகத்தில் தங்கியுள்ள பலர் தாயகம். திரும்ப முன் வருவர் என எதிர்பார்க்கபடுகின்றது. இதேநேரம் தாயகம் திரும்ப விரும்பும் தம்மை விமானங்கள் ஊடாக அன்றி தனியான கப்பலில் எடைகளின் வரையறையின்றி அனுப்பி வைக்க வேண்டும் என முன் வைக்கப்படும் கோரிக்கை தொடர்பில் இந்த தீர்மானத்தின்போது பிரஸ்தாபிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் அதிகளவான போதைப்பொருளை உட்கொண்ட இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணத்தில் அதிகளவான போதைப்பொருளை உட்கொண்ட இளைஞன் ஒருவர் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார். இதன்போது கோப்பாய் தெற்கு பகுதியைச் சேர்ந்த கணேசலிங்கம் கஷ்மன் (வயது 33) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் முதல்நாள் இரவு கோப்பாய் தெற்கு பகுதியில் உள்ள வாழை தோட்டம் ஒன்றுக்குள் மயக்கமுற்ற நிலையில் இருந்துள்ளார்.

இந்நிலையில் அவரை மீட்ட நண்பர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். அவரது சடலம் மீதான உடற்கூற்று பரிசோதனைகளின் அடிப்படையில், அதிகளவான போதைப்பொருள் பாவனையால் மரணம் சம்பவித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கோப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# வடக்கு மாகாணத்தில் 80 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை உதாசீனம் செய்ததுடன் பணிநீக்கம் செய்யவும் சதி செய்யும் மத்திய அரசின் உயர் அதிகாரிகள்!



வடமாகாணசபை இயங்காமல் இருக்கும் தற்போதையை நிலையைப் பயன்படுத்தி, எண்பதுக்கும் மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை முழுமையாக இல்லாமல் செய்வதற்கு மாகாண நிர்வாக உயர் அதிகாரிகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என சர்ச்சை எழுந்துள்ளது.

வடமாகாண சபைக்கு உட்பட்ட திணைக்களங்களால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை நேரடியாகக் கண்காணிப்பதற்காக கடந்த 2006 ஆம் ஆண்டு 82 அபிவிருத்தி உத்தியோகத்தர் பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்பட்டன.

கடந்த 2013 ஆம் ஆண்டு வடமாகாணசபை இயங்க ஆரம்பித்த நிலையில், 2017ஆம் ஆண்டு அப்போதைய பிரதம செயலாளர் நா.பத்திநாதனால் 82 பேருக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் செயற்பாடு தவிர்க்க முடியாததாக அமைந்தது. எனினும், அதன் பின்னர் இந்த ஆளணியின் எண்ணிக்கை 20ஆகக் குறைக்கப்பட்டதுடன், அவர்கள் எந்த நோக்கத்துக்காக நியமனம் பெற்றனரோ அதற்கு முற்றிலும் பொருத்தமற்ற மத்திய நிர்வாக அலகுகளுடன் இணைக்கப்பட்டனர்.

இந்த இணைப்புக்குப் பின்னர் மத்திய அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரிகள் சிலர் குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களைத் மிகவும் தரக்குறைவாக விமர்சிப்பதுடன், பொருத்தமற்ற துறைகளுக்கும், திணைக்களங்களுக்கும் இடமாற்றம் வழங்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

போதிய ஆளணி உள்ள திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவதால் அந்தத் திணைக்களங்கள் அவர்களை ஏற்காத நிலையும் உள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனால் மிகக் குறுகிய காலத்திலேயே அவர்கள் இரண்டுக்கும் மேற்பட்ட இடமாற்றங்களைச் சந்திக்க நேர்ந்துள்ளது.

வடக்கின் அபிவிருத்தித் திட்டங்களில் மிக வினைத்திறனாக செயற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தற்போதைய உயர் அதிகாரிகள் இவ்வாறு அலைக்கழிக்க வைப்பதும், அவர்களை மனஉளைச்சலுக்கு உள்ளாக்குவதும் பல்வேறு தரப்பினர்களிடத்தில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# யாழ்–இயக்கச்சி – "ரீச்சா"வின் உணவுப் பெருவிழா!



- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

**தமிழ்மக்கள் கொண்டாட்ட மனோ நிலையோடு இருக்கிறார்கள். கொண்டாடக் கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் கொண்டாடித் தீர்க்க ஆசைப்படுகிறார்கள். அது உணவு விழாவாக இருக்கட்டும், ஊர்க் கோவில் திருவிழாவாக இருக்கட்டும், பெருங்கோவில் திருவிழாக்களாக இருக்கட்டும், அல்லது பெருங் கடைகளின் திறப்பு விழாக்களாக இருக்கட்டும், எதுவா-னாலும் அங்கே மக்கள் ஆயிரக்கணக்கில் திரள்கிறார்கள். ஆனால் அதை வைத்துக்கொண்டு ரீச்சாவுக்குப் போன மக்கள் ஏன் தையிட்டிக்கு வரவில்லை? நோலிமிட்டுக்குப் போன மக்கள் ஏன் பலாலிக்கோ மயிலிட்டிக்கோ போராட வரவில்லை? என்று கேட்டு மக்களைக் குறை கூறுவது தோல்வியுறும் ஒரு சமூகத்தின் இயல்புதான். மாறாக ரீச்சாவுக்கும் நல்லூருக்கும் திரளும் மக்களை எப்படி தையட்டிக்குக் கொண்டு வருவது என்று சிந்தித்து உழைப்பதுதான் பெருந்திரள் அரசியலை முன்னெடுக்க விரும்பும் வெற்றி பெற்ற சமூகம் ஒன்றின் இயல்பாக இருக்கவேண்டும். முதலாளிகள் தங்களுடைய வணிக இலக்குகளை நோக்கி விடாது உழைக்கலாம் என்றால் அரசியல்வாதிகள் தங்களுடைய அரசியல் இலக்குகளை நோக்கி உழைக்கத்தானே வேண்டும்? சிவப்பு மஞ்சள் கொடிகளை அசைத்தால் மக்கள் பின்னுக்கு வருவார்கள் என்று ரீல்ஸ்களின் காலத்திலும் நம்பிக்கொண்டிருக்கலாமா?**

**யாழ்ப்பாணத்தில் நடந்த ஒப்பபீட்டளவில் பெரிய உணவுப் பெருவிழா சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கிறது. இயக்கச்சிப் பகுதியில் அமைந்திருக்கும் "ரீச்சா" நிறுவனம் ஒழுங்கு செய்த உணவுப் பெருவிழா திட்டமிடப்பட்டபடி மூன்று நாட்கள் நடக்கவில்லை முதலாவது நாளிலேயே இடைநிறுத்தப்பட்டது.**

**யா**ழ்ப்பாணத்தின் நவீன வரலாற்றில் சிறிய அளவில் உணவு பெரு விழாக்கள் ஆங்காங்கே நடந்திருக்கின்றன. ஆனால் ரீச்சாவின் உணவுப் பெருவிழா ஒப்பிட்டுளவில் பிரமாண்டமானது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து எழுபதுக்கும் குறையாத சமையல் கலை வல்லுனர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். நூற்றுக்கணக்கான வகை உணவுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. முன்பதிவுகளின் அடிப்படையில் 5000 பேர் வரை வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் முன்பதிவு இல்லாமலேயே மொத்தம் 15000த்துக்கு அதிகமானவர்கள் அந்த இடத்தில் குவிந்திருக்கிறார்கள். நிலைமையை ரீச்சா நிறுவனத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதைத்தான் பின்வந்த செய்திகள் நிரூபித்தன.

தமிழ் பகுதிகளில் நடந்த முதலாவது பெரிய உணவுப் பெருவிழா ஏன் முதலாவது நாளுடன் நிறுத்தப்பட்டது? அதற்கு இரண்டு பிரதான காரணங்களை கூறலாம். முதலாவது காரணம், ரீச்சா நிறுவனத்தின் முகமைத்துவக் கொள்ளளவில் காணப்பட்ட போதாமைகள். இரண்டாவது காரணம் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் தலைமைத்துவ வெற்றிடமும் அதன் விளைவுகளும்.

முதலாவது காரணத்தை சிறிது விரிவாகப் பார்க்கலாம். எதிர்பார்த்ததைவிட அதிக தொகையினர் வந்தபோது அவர்களைக் கையாள்வதற்கு ரீச்சாவிடம் பொருத்தமான ஏற்பாடுகள் இருக்கவில்லை. அதனால் நிலைமை கட்டுக்கடங்காமல் போவதைத் தடுப்பதற்காக மூன்று நாள் விழாவை முதலாவது நாளுடன் நிறுத்த வேண்டியதாயிற்று. அங்கே அவ்வளவு தொகை மக்கள் கூடியதை தமிழ் கூட்டு உளவியலின் ஒரு குறிகாட்டி என்று எடுத்துக் கொள்ளலாமா?

தமிழ்மக்கள் கொண்டாட்ட மனோ நிலையோடு இருக்கிறார்கள். கொண்டாடக் கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் கொண்டாடித் தீர்க்க ஆசைப்படுகிறார்கள். அது உணவு விழாவாக இருக்கட்டும், ஊர்க் கோவில் திருவிழாவாக இருக்கட்டும், பெருங்கோவில் திருவிழாக்களாக இருக்கட்டும், அல்லது பெருங் கடைகளின் திறப்பு விழாக்களாக இருக்கட்டும், எதுவானாலும் அங்கே மக்கள் ஆயிரக்கணக்கில் திரள்கிறார்கள்.

ஆனால் அதை வைத்துக்கொண்டு ரீச்சாவுக்குப் போன மக்கள் ஏன் தையிட்டிக்கு வரவில்லை? நோலிமிட்டுக்குப் போன மக்கள் ஏன் பலாலிக்கோ மயிலிட்டிக்கோ போராட வரவில்லை? என்று கேட்டு மக்களைக் குறை கூறுவது தோல்வியுறும் ஒரு சமூகத்தின் இயல்புதான். மாறாக ரீச்சாவுக்கும் நல்லூருக்கும் திரளும் மக்களை எப்படி தையட்டிக்குக் கொண்டு வருவது என்று சிந்தித்து உழைப்பதுதான் பெருந்திரள் அரசியலை முன்னெடுக்க விரும்பும் வெற்றி பெற்ற சமூகம் ஒன்றின் இயல்பாக இருக்கவேண்டும். முதலாளிகள் தங்களுடைய வணிக இலக்குகளை நோக்கி விடாது உழைக்கலாம் என்றால் அரசியல்வாதிகள் தங்களுடைய அரசியல் இலக்குகளை நோக்கி உழைக்கத்தானே வேண்டும்? சிவப்பு மஞ்சள் கொடிகளை அசைத்தால் மக்கள் பின்னுக்கு வருவார்கள் என்று ரீல்ஸ்களின் காலத்திலும் நம்பிக்கொண்டிருக்கலாமா?

தமிழ் மக்கள் தமது தேசிய அரசியலின் மீது உணர்திறன் குறைந்தவர்களாக மாறி வருகிறார்களா? ஒரு பகுதியினர் அரசியல் நீக்கம் செய்யப்படுகிறார்கள். ஒரு தலைமுறையின் கைபேசி செயலிகளுக்குள், அவர்கள் விரும்பிப் பார்க்கும் ரீல்ஸ்களுக்குள் தமிழ்த்தேசிய உரையாடல் இல்லை. ஒடுக்குமுறையும் ஆக்கிரமிப்பும் நேரடியானதாக இல்லாமல் மறைமுகமானதாக திணைக்களங்களின் வழி முன்னெடுக்கப்படுவதாகக் காணப்படும் ஓர் அரசியல் சூழலில், தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் அரசியலின் மீது




தமிழ் மக்களை உணர்திறன் மிக்கவர்களாக மாற்ற வேண்டிய பொறுப்பு யாருடையது? தமிழ்மக்கள் அரசியல் நீக்கம் செய்யப்படுகிறார்கள் என்று சொன்னால் அது தமிழ் அரசியல்வாதிகளின் தோல்விதான்.

கொண்டாட்ட மனோநிலையோடு இருக்கும் மக்கள் உணவு விழாவை நோக்கி குவிந்தார்கள். அவர்களைக் கட்டுப்படுத்த ரீச்சாவால் முடியவில்லை. ஆனாலும் ரிச்சா முதலாளி பாஸ்கரன் அதற்காக பொதுமக்களிடம் மன்னிப்புக் கேட்டிருக்கிறார். முன்பதிவு செய்தும் உணவு கிடைக்காதவர்களுக்கு பணம் மீள அளிக்கப்படும் என்று உறுதி கூறியுள்ளார்.

இரண்டாவது காரணம், தமிழ்த் தேசிய அரசியலில் காணப்படும் தலைமைத்துவ வெற்றிடம். அதனால் தமிழ்மக்கள் ஒருபுறம் அரசியல்நீக்கம் செய்யப்படுகிறார்கள். இன்னொருபுறம் ஒரு சமூகமாக, ஒரு தேசமாக, ஒரு கிராமமாக, ஏன் சில சமயங்களில் ஒரு குடும்பமாகக்கூட திரள முடியாத நிலைமைகள் வளர்ந்து வருகின்றன.

தமிழ் மக்கள் யாரையும் நம்பாத மக்களாக்எல்லாரையும் எல்லாவற்றையும் சந்தேகிக்கும் மக்களாக்மற்றவர்கள் மீது பிழை கண்டுபிடிக்கின்ற எரிச்சலுற்ற குறைகூறிகளாக்வெறுப்பர்களை விடுப்புணர்வோடு ரசிக்கின்ற மக்களாக, சமூகஊடக வலைத்தளங்களில் நோய்க்கூறான, நஞ்சான விவாதங்களில் ஈடுபடும் மக்களாக மாறிவருகிறார்கள். ஒருவர் மற்றவரை நம்பாமை என்பது அதன் வளர்ச்சிக் கட்டத்தில் தன்னைத்தானே நம்பாமையில் வந்து முடிகிறது. தமிழ்ச் சமூகம் ஏறக்குறைய அப்படி ஒரு நிலையை நோக்கித்தான் செல்கிறதா?

சில தினங்களுக்கு முன் ஆளுநர் செயலகத்தில் நடந்த ஒரு கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று மாதங்களுக்குள் 80 பேர் தற்கொலை செய்திருக்கிறார்கள். நாடு முழுவதிலும் ஒரு லட்சம் பேருக்கு 15 பேர் என்ற விகிதத்துடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சம் பேருக்கு 30 பேர் என்ற விகிதத்தில் தற்கொலை செய்திருக்கிறார்கள்.

இந்தப் புள்ளி விபரங்கள் மட்டுமல்ல இதைவிட ஆபத்தான புள்ளி விபரங்கள் உண்டு. மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தண்ணீர்ப் போத்தல்களோடும் ஜம்பர்களோடும் வித்தியாசமான காலணிகளோடும் உள்ளூர் வீதிகளில் நடந்த திரியும் புலம்பெயர்ந்த தமிழர்கள் இளையவர்களுக்கு முன்னுதாரணமாக மாறுகிறார்கள். முதலாவது பட்டப்படிப்பை முடித்த பலரும் இரண்டாவது பட்டப்படிப்பை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி புலம்பெயர விரும்புகிறார்கள். மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை இளையவர்களை அள்ளிக்கொண்டு போய்விடுமா? ஒருபுறம் கோவில்களில் சுவாமி தூக்க இளையோர் இல்லை. இன்னொருபுறம் அதே கோவில்களில் பின்னிரவில் நடக்கும் இசை நிகழ்ச்சிகளில் மேடையின் முன் வரிசையில் நின்று ஆடும் இளையவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்?

தேசியவாத அரசியல் எனப்படுவது ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாக திரட்டுவது தான். ஆனால் நமது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் மக்களை மட்டுமல்ல தமது சொந்தக் கட்சிகளையே திரட்ட முடியாதவர்களாகக் காணப்படுகிறார்.

தமிழ் மக்களின் அரசியல், சமூகப் பொருளாதார, பண்பாட்டு விடயங்களில் யார் சொல்வதை தமிழ்மக்கள் கேட்பார்கள்? யாரை தமது முன் உதாரணமாகப் பார்க்கிறார்கள்? இந்தத் தலைமைத்துவ வெற்றிடம் காரணமாக தமிழ் மக்களின் அரசியல், சமூகப்பொருளாதார வாழ்வைத் தீர்மானிக்கும் விவகாரங்களில் தமிழ்மக்கள் முடிவெடுக்க முடியாத மக்களாகவும் சமூக ஊடக வலைத்தளங்களின் பெருமளவுக்கு பொழுதுபோக்கான, நஞ்சான விவாதங்களால் திசைதிருப்பப்படும் மக்களாக, யாரையும் நம்பாத மக்களாக, ஒரு கட்டத்தில் தங்களைத் தாங்களே நம்பாத மக்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

ரீச்சா ஒரு வணிக வளாகம். அதற்கென்று வணிக இலக்குகள் உண்டு. வணிகர்கள் வணிக இலக்குகளை முன்வைத்து உழைப்பார்கள். ஆனால் அரசற்ற தமிழ் மக்கள் தமது தேசிய முதலாளிகளை எப்படி அணுக வேண்டும்? தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது என்ற நோக்குநிலையில் இருந்துதான் அணுக வேண்டும்.

ரிச்சா முதலாளி மாகாண சபைத் தேர்தலில் இறங்கக்கூடும் என்ற ஊகம் கடந்த சில மாதங்களாக சமூக ஊடக வலைத்தளச் சூழலில் பலமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. ரீச்சா முதலாளிக்குச் சொந்தமான ஊடகங்கள் ஒரு பகுதி அரசியல்வாதிகளுக்கு எதிரான கருத்துக்களை குவிமையப்படுத்துகின்றன என்ற குற்றச்சாட்டும் உண்டு. இதனால் ரீச்சாவின் உணவுப் பெரு விழாவின் மீதான விமர்சனங்களில் ஒரு பகுதிக்கு அரசியல் பரிமாணம் உண்டு.

ரீச்சா முதலாளி ஒரு முகநூல் வாசிதான். அடிக்கடி நேரலையில் வருபவர்தான். அடிக்கடி கண்முன் தோன்றி கொண்டேயிருப்பார். அது அவருடைய பாணி. அவருடைய விருப்பம். ஆனால் அடிக்கடி கண்முன் தோன்றும்போது, அது அவர் மீது எரிச்சல் கொண்டவர்களை அடிக்கடி கோபப்படுத்தும் அடிக்கடி சினக்கச் செய்யும் அவர்கள் அடிக்கடி எழுதிக் கொண்டேயிருப்பார்கள். எனினும் தன் மீது கொட்டப்படும் விமர்சனங்களையும் வெறுப்பையும் செமித்துக்கொண்டு அவர் தொடர்ந்து நேரலையில் வருகிறார்.

அவர் ஒரு நேரலைவாசி, எதிர்காலத்தில் தேர்தல் அரசியலில் குதிக்கக்கூடும் போன்ற எல்லாவற்றிற்கும் அப்பால், முதலாவதாகவும் முக்கியமானதாகவும் தமிழ்த்தேசிய நோக்குநிலையில் அவர் ஒரு தேசிய முதலாளிதமிழ்த்தேசிய முதலாளி.

*(தொடர்ச்சி 10 பக்கம்)*

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கொலைகளை தடுக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் வேதநாயகன் உத்தரவு!





யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக் காலமாக தவறான முடிவெடுத்து உயிரிழக்கும் சம்பவங்கள் கவலைக்கிடமாக அதிகரித்து வருகின்ற நிலையில், அவற்றைத் தடுப்பதற்கான துரித நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிப்பதுடன், அதற்கான ஒருங்கிணைந்த கட்டமைப்புகளை மீளச் செயற்பாட்டு நிலைக்குக் கொண்டுவர விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை வழங்கினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 11ம் திகதி திங்கட்கிழமை அன்று (11.08.2026) மாலை நடைபெற்ற விசேட உயர்மட்ட கலந்துரையாடலின் போதே ஆளுநர் இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

கலந்துரையாடலில், யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் 80 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளமை தொடர்பில் ஆழ்ந்த கவலை வெளியிடப்பட்டது. தேசிய மட்டத்தில் ஒரு இலட்சம் பேருக்கு 15 பேர் என்ற விகிதத்துடன் ஒப்பிடுகையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு இலட்சம் பேருக்கு சுமார் 30 பேர் என்ற அளவில் இவ்வாறான உயிரிழப்புகள் பதிவாகி வருவதாக மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டினர். குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்கள் மத்தியில் இந்தப் போக்கு அதிகரித்து வருவதும் கவலைக்குரிய விடயமாகக் குறிப்பிடப்பட்டது.

மது பாவனைக்கு அடிமையாதல், குடும்ப வன்முறை, குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலான தொடர்பாடல் குறைவு, பெற்றோர் - பிள்ளைகள் மற்றும் ஆசிரியர்கள் - மாணவர்கள் இடையிலான நெருக்கம் குறைவடைதல், தனிமை, சமூக மற்றும் உளவியல் அழுத்தங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் இந்நிலைக்கு செல்வாக்குச் செலுத்தி வருவதாக மருத்துவ நிபுணர்கள் கலந்துரையாடலில் எடுத்துரைத்தனர். இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு சுகாதாரத் துறையின் முயற்சிகள் மட்டும் போதுமானதல்ல சமூகத்தின் அனைத்து தரப்பினரின் பங்களிப்பும் அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டது.

ஆபத்தான மனநிலையிலிருந்து மீட்கப்பட்ட நபர்களுக்கான தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் ஆலோசனைச் சேவைகளில் காணப்படும் குறைபாடுகள், பால்நிலை வன்முறைகளால் பாதிக்கப்படுபவர்களுக்கான பல்துறை ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் போதுமானளவில் இடம்பெறாமை உள்ளிட்ட விடயங்களும் கலந்துரையாடலில் அடையாளம் காணப்பட்டன. அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறும், பதிவாகியுள்ள உயிரிழப்புகள் தொடர்பில் விரிவான ஆய்வை மேற்கொண்டு, காரணிகளை விஞ்ஞான ரீதியாக பகுப்பாய்வு செய்து தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துமாறும் ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இந்தத் தடுப்புச் செயற்றிட்டம் சுகாதாரத் துறையின் எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக இல்லாமல், கல்வி, சமூக சேவைகள், நிர்வாகம், பொலிஸ், மதத் தலைவர்கள், சமூக அமைப்புகள் மற்றும் ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் ஒருங்கிணைந்த பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டிய மாகாணளவிலான சமூக இயக்கமாக அமைய வேண்டும் என்றும் ஆளுநர் வலியுறுத்தினார். அதற்காக கள மட்ட உத்தியோகத்தர்களின் பங்களிப்பை மேலும் வலுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்புடைய நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பிலேயே தற்போது மிகப்பெரிய இடைவெளி காணப்படுவதாகக் குறிப்பிட்ட ஆளுநர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஒருங்கிணைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் இணைக்கும் செயற்பாட்டு பொறிமுறையை மீளச் செயற்படுத்துமாறும் அறிவுறுத்தினார்.

மேலும், தவறான முடிவெடுத்து உயிரிழக்கும் சம்பவங்கள் தொடர்பான செய்திகளை ஊடகங்கள் பொறுப்புணர்வுடனும் சமூக நலனைக் கருத்திற்கொண்டும் வெளியிடுவதன் அவசியமும் கலந்துரையாடலில் விசேடமாக வலியுறுத்தப்பட்டது.

இதேவேளை, மனஅழுத்தம், தனிமை, குடும்பப் பிரச்சினைகள் அல்லது ஏனைய வாழ்க்கை நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டு உதவி தேவைப்படும் எவரும், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் 24 மணிநேரமும் இயக்கப்படும் "நேயம்" உளவள ஆதரவு சேவையின் 021 222 6666 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்புகொண்டு இரகசியமான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதும் கலந்துரையாடலில் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவ நிபுணர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர், வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்டச் செயலக உளவள இணைப்பாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



# கிளிநொச்சியில் நடைபெற்ற மாவட்ட கடற்றொழில் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்!

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது கடற்றொழில் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 11ம் திகதி திங்கட்கிழமை அன்றைய தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஆகியோர் பங்கேற்றதுடன், பல்வேறு விடயங்கள் தொடர்பில் துறை சார்ந்தவர்களுடன் கலந்துரையாடியதோடு, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் தொடர்பில் பல விடயங்களை முன்வைத்திருந்தார்.

குறிப்பாக, தட்டுவன்கொட்டி பகுதியில் மக்களின் வாழ்வாதாரக் காணிகள் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் உரிய தீர்வினை வழங்குமாறு வலியுறுத்திய நிலையில், அதற்கு ஒரு வார காலத்திற்குள் உடனடித் தீர்வு எட்டப்படும் என அமைச்சரினால் உறுதியளிக்கப்பட்டது.

அதேபோன்று இரணைமடு நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள், சாந்தபுரம் பகுதி மீனவர்கள், பள்ளிக்குடா மீனவ உறவுகள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்தும் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சர்களினால் பதிலளிக்கப்பட்டதுடன், அவற்றுக்கான தீர்வுகள் விரைவாக வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில், கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.கே.கோலித கமல் ஜினதாச, மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வட மாகாணத்தில் நிலத்தடி நீர்வளத்தைப் பாதுகாக்க முன்னெடுக்கப்படும் திட்டங்களையே பாதிக்கும் கருத்துக்களை ஏற்க முடியாது என்று தெரிவித்த ஆளுநர்!



நிலத்தடி நீர்வளத்தைப் பாதுகாக்கும் நோக்கில் பல மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படும் நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களின் அடிப்படை நோக்கத்தையே பாதிக்கும் வகையிலான கருத்துக்களும் கோரிக்கைகளும் முன்வைக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். இயற்கை வளங்களைப் பாதுகாப்பது குறுகியகால தேவைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அல்லாது, அறிவியல் ஆதாரங்கள், நீண்டகால திட்டமிடல் மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலனை முன்னிறுத்திய பொறுப்புணர்வுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலத்தடி நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் திட்டத்தின் இறுதிச் செயலமர்வு 13ம் திகதி அன்று (13.08.2026) வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்துகொண்டு உரையாற்றினார். வடக்கு மாகாண பிரதம செயலாளர் சார்பில் பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல்) ந.சுதாகரன் கலந்துகொண்டு கருத்துரையாற்றினார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடிநீர், விவசாயம், மக்களின் வாழ்வாதாரம் மற்றும் எதிர்கால அபிவிருத்தி என்பன அனைத்தும் நிலத்தடி நீர்வளத்துடன் பிரிக்க முடியாத வகையில் பின்னிப்பிணைந்துள்ளதாகக் குறிப்பிட்டார். எனவே நிலத்தடி நீரைப் பாதுகாப்பது ஒரு சுற்றுச்சூழல் நடவடிக்கை மட்டுமல்ல, மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் தேசியப் பொறுப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் ஊடாக நிலத்தடி நீர் கண்காணிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், நிலத்தடி நீரின் அளவு மற்றும் தரம் தொடர்பான தகவல்களை தொடர்ச்சியாகப் பதிவுசெய்யும் நவீன கண்காணிப்பு முறைமை உருவாக்கப்பட்டுள்ளமை, மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் மீள்நிரப்பு நடவடிக்கைகள், பாடசாலை மாணவர்களை உள்ளடக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு பெறுபேறுகள் உருவாக்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது என ஆளுநர் குறிப்பிட்டார்.

தொண்டமனாறு நீரேரித் தடுப்பணைத் திட்டத்தை எடுத்துக்காட்டாக குறிப்பிட்ட ஆளுநர், பல மில்லியன் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள இத்தகைய நீர்வளப் பாதுகாப்புத் திட்டங்களின் பயன்கள் தற்போது வெளிப்படத் தொடங்கியுள்ள நிலையில், குறுகியகால அழுத்தங்களின் அடிப்படையில் அவற்றின் நோக்கத்தை பாதிக்கும் தீர்வுகளை முன்வைப்பது பொருத்தமற்றது என்றார். எதிர்காலத் தீர்மானங்கள் அனைத்தும் அறிவியல் தரவுகள் மற்றும் ஆய்வுகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நிலத்தடி நீர்வளப் பாதுகாப்பு என்பது ஒரு தனி நிறுவனத்தின் பொறுப்பு அல்ல என்றும், திணைக்களங்கள், ஆய்வு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து செயற்பட்டால்தான் நிலையான தீர்வுகளை உருவாக்க முடியும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்கள் நிறைவடைந்த பின்னரும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள், பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதி, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாயத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியாளர்கள், அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.





# கனடா கந்தசாமி ஆலய கந்தவேளின் பேரருளால் இனிதே நிறைவுற்ற மகோற்சவமும், நன்றியுரையும் ஆடிவேல் மற்றும் கார்த்திகேயன் விழா அழைப்பும்!









கனடா கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்திர மகோற்சவப் பெருவிழா, நேற்று பூங்காவனம் மற்றும் பக்தர்களால் பக்திப்பரவசத்துடன் போற்றப்படும் திருக்கல்யாண வைபவங்களுடன் மிகச் சிறப்பாகவும் நிறைவாகவும் நிறைவுற்ற வேளையில், இந்த தெய்வீகத் திருவிழாவை வெற்றிகரமாக நடத்தி முடித்த அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். முதலாம் நாள் கொடியேற்றத் திருவிழா முதல் இறுதி நாள் திருக்கல்யாணம் வரை அனைத்து மங்களகரமான ஆன்மீகக் கிரியைக-ளையும், இந்து சமய ஆகம விதிகளின்படி மிகத் துல்லியமாகவும், அளப்பரிய பக்தியோடும், அர்ப்பணிப்புணர்வோடும் தலைமை தாங்கி நடத்திய மகோற்சவப் பிரதம குருக்கள் சிவபங்குசம் குருக்கள் அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளையும் புண்ணியக் கோடிகளையும் சமர்ப்பிக்கின்றோம். அதேபோல், கடந்த இருபத்தாறு நாட்களாக இந்த மாபெரும் பெருவிழாவை
எவ்வித குறைபாடுகளுமின்றி, மிகச் சிறந்த நிர்வாகத் திறமையோடும், வியக்கத்தக்க வழிகாட்டுதலோடும், அர்ப்பணிப்போடும் முன்னின்று வழிநடத்திய ஆலயத் தலைவர் முத்துராஜலிங்கம் சுப்பிரமணியம் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இத்திருவிழா இத்தனை பிரம்மாண்டமாக வெற்றிபெற தங்களின் மேலான பங்களிப்பை வழங்கிய அனைத்து இந்து குருமார்கள், அர்ச்சகர்கள் மற்றும் இரவு பகல் பாராது, அடிய-ார் கூட்டத்தை முறைப்படுத்தி, ஆலயப் பணிகளை இன்முகத்தோடு கவனித்த எண்ணற்ற தொண்டர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள் உரியதாகுக. ஆலயப் பெருவெளியை கைலாயமாக மாற்றிய நாதஸ்வர, தவில் வித்துவான்கள் மற்றும் தங்களின் கலைத்திறமையால் பக்தர்களைக் கட்டிப்போட்ட பல்வேறு கலைக் கலைஞர்களின் தெய்வீகப் பங்களிப்பிற்கும் எங்களது பாராட்டுகளும் நன்றிகளும். இறுதியாக, திருவிழா காலம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு பசியார அன்னதானம் வழங்கி, உணவை மிகத் தூய்மையாகவும் சுவையாகவும் தயாரித்துப் பரி-மாறிய சமையல் கலைக் குழுவினருக்கும் மற்றும் அன்னதானப் பணித் தொண்டர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் அனைவரினதும் இந்த உன்னதமான சிவத்தொண்டு என்றும் போற்றத்தக்கது.இந்த ஆன்மீகப் பெருவிழாவின் தொடர்ச்சியாக,
வருகின்ற வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் ஆலய வளாகத்தில் மிக பிரம்மாண்டமாக நடைபெறவுள்ள ”பெருமகிழ்ச்சி ஊட்டும் ஆடிவேல் மற்றும் கார்த்திகேயன் கலைக் கொண்டாட்டங்களுக்கு” உங்களை அன்போடு அழைக்கின்றோம். பக்திப் பாடல்கள், நடனங்கள் மற்றும் கண்கவர் கலை நிகழ்ச்சிகளுடன் அரங்கேறவிருக்கும் இந்த எழுச்சிமிகு கொண்டாட்டத்தில் அடியார் பெருமக்கள் அனைவரும் தங்களின் குடும்பத்தினருடன் பெருந்திரளாகக் கலந்து சிறப்பித்து, எம்பெருமானின் திருவருளையும் மகிழ்வையும் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இக்கலைக் கொண்டாட்டங்களுக்கான அனு-மதி முற்றிலும் இலவசம் என்பதுடன், வருகை தரும் பக்தர்களுக்கான வாகன நிறுத்த வசதிகளும் ஆலய வளாகத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

செய்தியும் புகைப்படங்களும் :**Langes FCPA**
**Tamil Bc Media**

(8 பக்கத் தொடர்ச்சி)

# யாழ்–இயக்கச்சி – “ரீச்சா’’வின் உணவுப் பெருவிழா!

எல்லாத் தேசிய முதலாளிகளும் தேச நிர்மாணத்தின் பிரிக்கப்படவியலாத பங்காளிகளாக இருந்திருக்கிறார்கள் என்பதைத்தான் வரலாறு நமக்குக் கற்றுத் தந்திருக்கிறது. தேசத்தைக் கட்டியெழுப்புவது என்பது தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதும்தான். அதை நடைமுறை வார்த்தைகளில் சொன்னால், தேசிய முதலாளிகளை, நி-றுவன உருவாக்கிகளைக் கட்டியெழுப்புவதும் தான்.

தமிழ்மக்கள் தங்களை ஒரு தேசமாகத் திரட்டிக்கொள்ள வேண்டும் என்ற தாகத்தோடு சிந்திப்பார்களாக இருந்தால் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் நிறுவனங்களை உருவாக்கும் கெட்டிக்காரர்களை எப்படித் தேச நிர்மானத்தின் பிரிக்கப்படவியலாத பகுதிகளாக மாற்றலாம் என்றுதான் சிந்திப்பார்கள். ஒரு சமூகத்துக்குள் உருவாகும் நிறுவன உருவாக்கிகள் எல்லாருமே தேசிய பண்பு மிக்கவர்களாக அல்லது தேசிய விழிப்பைக் கொண்டவர்களாக அல்லது தெளிவான விளக்கமான அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டவர்களாக இருப்பார்கள் என்றில்லை. அவர்கள் தங்கள் துறைசார்ந்து கெட்டிக்காரர்களாக இருப்பார்கள். அந்தத் தேசிய ஆற்றலை எப்படி ஒரு தேசிய வளமாக மாற்றலாம், தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாக இணைத்துக்கொள்ளலாம் என்று சிந்திப்பதுதான் அரசற்ற தமிழ் மக்களுக்குப் புத்திசாலித்தனமானது நீண்டகால நோக்கு நிலையில் தீர்க்கதரிசனமானது.

ஆனால் இதுதொடர்பில் தேசத்தைத் திரட்டும் நோக்குநிலையில் இருந்து முதலாளிகளையும் நிறுவன உருவாக்கிகளையும் அணுகுவதற்கு மையமான ஒரு பொதுவான கட்டமைப்பு தமிழ்மக்கள் மத்தியில் இல்லை. இதுதான் பிரச்சினை. தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?

யாரும் பொறுப்பில்லை. அதனால்தான் முதலாளிகளும் பிரபல
ஓய்வூதியர்களும் அரசியலுக்கு வர எத்தனிக்கிறார்கள். தமிழ்மக்கள் தங்களுடைய அரசியல் சமூகப் பொருளாதார, கலை பண்பாட்டு விவகாரங்களை எந்த நோக்கு நிலையில் இருந்து அணுகவேண்டும்? தமிழ்மக்களை எப்படி ஒரு தேசமாகத் திரட்டுவது? என்ற அரசியல் தரிசனம்சமூக பண்பாட்டுத் தரிசனம் பொருளாதாரத் தரிசனம்கலை பண்பாட்டுத் தரிசனம் கொண்ட ஒரு பொது அமைப்பு அல்லது மையமான அமைப்பு தமிழ்மக்கள் மத்தியில் இல்லை.

இந்த வெற்றிடத்தில் புலம்பெயர்ந்து உழைத்து, தாம் திரட்டிய செல்வத்தை தாயகத்தில் முதலீடு செய்யவேண்டும் என்று தாகத்தோடு வரும் முதலாளிகளை வரவேற்று அவர்களை எப்படித் தேச நிர்மாணத்தின் தவிர்க்கப்படவியலாத பங்காளிகளாக மாற்றலாம் என்று சிந்திக்கும் அரசியல்
தலைவர்கள் சமூகத் தலைவர்கள் முன்னுக்கு வர வேண்டும். யாரையும் நம்பாமல் தன்னைத்தானே நம்பாமல்வெறுப்பர்களை விடுப்புணர்வோடு பார்க்கும் ஒரு சமூகத்தைத் அதன் கொந்தளிப்பான கூட்டு உளவியலை இலட்சியப் பாங்கானதாகக் கட்டியெழுப்பவல்ல தலைவர்கள் முன் வர வேண்டும்.

தேசிய பண்புமிக்க பெரு முதலாளிகளை எப்படித் தேசிய
பொருளாதாரத்தின் அங்கமாக மாற்றலாம் என்று சிந்திக்கும் தீர்க்கதரிசனம்மிக்க தலைவர்கள் இல்லாத வெற்றிடத்தில் சமூகத்தை ஒரு பொதுக் கருத்தை நோக்கிபொதுவான நியாயங்களை நோக்கிபொதுவான சமூகப்பொருளாதார, கலை பண்பாட்டு இலட்சியங்களை நோக்கி வழிநடத்தவல்ல தலைவர்களோ அமைப்புக்களும் இல்லாத ஒரு ெ வற்றிடத்தில், தமிழ்மக்கள் தங்களுக்குள் தாங்களே மோதிக்கொண்டுதங்களைத் தாங்களே திட்டிக்கொண்டுதங்களைத் தாங்களே நம்பாமல்தங்களைத் தாங்களே தோற்கடித்துக் கொண்டிருக்கிறார்களா?

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

உலக செய்திகள்
World News

# 2036க்குள் 1.5 லட்சம் கோடி பொருளாதார இலக்கென தமிழக அரசின் அமைச்சர் கீர்த்தனா தெரிவிப்பு



2036-க்குள் 1.5 லட்சம் கோடி பொருளாதார இலக்கென அமைச்சர் கீர்த்தனா கூறினார். சென்னையில் நடைபெற்ற வெற்றி தமிழ்நாடு 2026 முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்-அமைச்சர் விஜய் முன்னிலையில் பல்வேறு தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதன்மூலம் 1,06,998 பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன.

மாநாட்டில் தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா பேசியதாவது: மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழகம் முதலீட்டுக்கான நம்பகமான மாநிலமாக முதல் இடத்தில் உள்ளது. 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகியுள்ளன. ஒரு நாளைக்கு ஆயிரம் கோடி என்ற அளவில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு ஒரு லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. தமிழக வெற்றி கழக ஆட்சியமைத்த 100 நாட்களில் 1 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு. தொழில் வளர்ச்சிக்கு தேவையான அனைத்தும் தமிழ்நாட்டில் உள்ளன. 2036-ம் ஆண்டுக்குள் 1.5 அமெரிக்க டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை முதல்-அமைச்சர் நிர்ணயம் செய்துள்ளார். வேலைக்காக யாரும் சொந்த ஊரை விட்டு செல்லக்கூடாது என்பதே இலக்கு. 21 நாட்களில் தொழில் நிறுவனங்களுக்கான அனுமதிகள் வழங்கப்படுகிறது. தமிழகத்தின் தொழில் பரிமாணங்கள் இந்த முதலீட்டாளர் மாநாட்டின் மூலமாக மாற்றப்பட உள்ளது. திறமையும் மனித வளமும் தமிழகத்தில் குவிந்துள்ளது. இன்றைய முதலீடுகள் அடுத்த 10 ஆண்டுகளுக்கு எங்களுடைய பாதையை காட்டுகிறது. “வெற்றி தமிழ்நாடு 2026” ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும். இவ்வாறு அவர் கூறினார்.

# 14ம் திகதி நடைபெறவுள்ள அ.தி.மு.க.வின் மாநிலம் தழுவிய போராட்டத்தில் பங்கேற்க முடியாதென எஸ்.பி.வேலுமணி தரப்பு தெரிவிப்பு



அதிமுக போராட்டத்தில் பங்கேற்க முடியாதென எஸ்.பி.வேலுமணி தரப்பு கூறியுள்ளது. தமிழக சட்டசபை தேர்தலில் ஏற்பட்ட தோல்வி காரணமாக, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக எஸ்.பி. வேலுமணி தரப்பு எம்.எல்.ஏ.,க்கள் பிரிந்து, சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் தவெகவுக்கு ஆதரவு அளித்ததைத் தொடர்ந்து அதிமுகவில் இபிஎஸ் அணி, எஸ்.பி. வேலுமணி அணி என இரண்டாகப் பிரிந்தது. பின்னர் பேச்சுவார்த்தைக்கு பிறகு இரு அணிகளும் ஒன்றாக இணைந்தன. இதில் சி. விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர் உள்ளிட்ட முன்னாள அமைச்சர்கள் பலர் தவெகவில் இணைந்தனர்.

அதிமுக தோல்விக்கான காரணத்தை ஆராய வேண்டும் என்று சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி ஆகியோர் கூறி வருகின்றனர். பழைய பொறுப்புகளை மீண்டும் வழங்க வேண்டும் என இபிஎஸ்ஸுக்கு எஸ்.பி. வேலுமணி தரப்பினர் 2 முறை கடிதம் எழுதியும் இபிஎஸ் எந்த பதிலும் தரவில்லை என கூறப்படுகிறது. சென்னை பாலவாக்கத்தில் உள்ள சி.வி. சண்முகம் இல்லத்தில் எஸ்.பி. வேலுமணி, நத்தம் விஸ்வநாதன், கே.பி. அன்பழகன் உள்ளிட்டோர் (ஆக. 12, புதன்) இரவு ஆலோசனை மேற்கொண்டனர். சுமார் 5 மணி நேரம் இந்த ஆலோசனை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. இந்தநிலையில், விவசாயக் கடன் தள்ளுபடி மற்றும் மேகதாது விவகாரத்தில் த.வெ.க. அரசைக் கண்டித்து, ஆகஸ்ட் 14-ல் அதிமுக மாநில தழுவிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அதிமுக சார்பில் அறிவிக்கப்பட்டது.

திடீர் திருப்பமாக, காவேரி விவகாரத்தில் கர்நாடக அரசை கண்டித்து அதிமுக அறிவித்துள்ள ஆர்ப்பாட்டத்திற்கு முழு ஆதரவு வழங்குகிறோம். ஆனால் சொந்த மாவட்டத்தை விடுத்து வேறு மாவட்டத்திற்கு சென்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள இயலாது. இது எங்களை புறக்கணிக்கும் நோக்கில் எடுக்கப்பட்ட முடிவாக தெரிகிறது. எங்களுக்கு மாநில, மாவட்ட பொறுப்புகள் மீண்டும் வழங்கப்படும் என்ற உறுதி என்னானது? ஏற்கனவே நாங்கள் வகித்து வந்த பதவிகளை வழங்க வேண்டும் என வேலுமணி தரப்பு தெரிவித்துள்ளது.

# நைஜீரியாவில் பாதுகாப்புப்படையினர், அரசிற்கு எதிரான ஆயுதக்குழுவினர் இடையில் ஏற்பட்ட மோதலில் 29 பேர் உயிரிழந்தனர்



நைஜீரியாவில் பாதுகாப்புப்படையினர் - ஆயுதக்குழுவினர் மோதலில் 29 பேர் உயிரிழந்தனர். மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்நாட்டில் ஐ.எஸ்., அல்கொய்தா, போகோ ஹராம் போன்ற பயங்கரவாத அமைப்புகளும், பல்வேறு ஆயுதக்குழுக்களும், கிளர்ச்சி குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. அதேபோல், பணத்திற்காக பொதுமக்கள், பள்ளிக்குழந்தைகள், கால்நடைகளை கடத்தும் பண்டிட்ஸ் என்ற ஆயுத கும்பல்களும் செயல்பட்டு வருகிறது.

இந்த குழுக்கள் பாதுகாப்புப்படையினர், பொதுமக்களை குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்நிலையில், அந்நாட்டின் சாபரா மாகாணத்தில் இருந்து கிபி மாகாணத்திற்கு வனப்பகுதி வழியாக ஆயுதக்குழுவினர் நேற்று முன் தினம் பண்டிட்ஸ் ஆயுதக்குழுவினர் 200க்கும் மேற்பட்டோர் பைக்குகளில் சென்றுள்ளனர்.

அப்போது, அங்கு பாதுகாப்புப்பணியில் இருந்த பாதுகாப்புப்படையினர் மீது ஆயுதக்குழுவினர் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். இதனால் இரு தரப்பிற்கும் இடையே துப்பாக்கி சண்டை ஏற்பட்டது. இந்த மோதலில் பாதுகாப்புப்படையினர் 10 பேர், ஆயுதக்குழுவினர் 17 பேர், பொதுமக்கள் 2 பேர் என மொத்தம் 29 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, துப்பாக்கிசூடு தாக்குதல் நடத்திய ஆயுதக்குழுவினர் அங்கிருந்து தப்பிச்சென்றனர். அதேவேளை, தாக்குதலை தொடர்ந்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற கூடுதல் படையினர் தப்பிச்சென்ற ஆயுதக்குழுவினரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# அமெரிக்காவில் ராணுவ ஹெலிகாப்டர் விபத்தில் சிக்கியதில் 2 சிப்பாய்கள் பலியானார்கள்



அமெரிக்காவில் ராணுவ ஹெலிகாப்டர் விபத்தில் சிக்கியதில் 2 சிப்பாய்கள் பலியானார்கள். அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் சலாடோ பகுதியருகே அமெரிக்க ராணுவத்தின் தாக்குதல் வகையை சேர்ந்த அபாச்சி ரக ஹெலிகாப்டர் ஒன்று பறந்து சென்று கொண்டிருந்தது. அதில், 2 ராணுவ சிப்பாய்கள் பயணித்தனர். அப்போது அந்த ஹெலிகாப்டர் திடீரென வயல்வெளியில் விழுந்து வெடித்து சிதறியது.

எனினும் 100 ஏக்கர் பரப்பளவுக்கு தீ பரவி சேதம் ஏற்பட்டது. இந்த விபத்தில் சிக்கி ஹெலிகாப்டரில் இருந்த 2 சிப்பாய்கள் பலியானார்கள். வேறு யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. ராணுவ ஹெலிகாப்டர் விபத்தில் சிக்கியதற்கான காரணம் உடனடியாக தெரிய வரவில்லை. அதுபற்றி விசாரணை நடந்து வருகிறது. இதுபற்றி ராணுவம் வெளியிட்ட செய்தியில், விபத்தில் சிக்கி 2 சிப்பாய்கள் பலியானார்கள் என்ற தகவலை உறுதிப்படுத்தி உள்ளனர். இந்த விவரம் அவர்களுடைய உறவினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டு உள்ளது. அதுவரை அவர்களின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் வெளியிடப்படாது என தெரிவித்தனர்.

# ஹார்முஸ் ஜலசந்தி விவகாரத்தில் டிரம்பின் கருத்தை ஈரான் நிராகரித்தது

ஹார்முஸ் ஜலசந்தி விவகாரத்தில் டிரம்பின் கருத்தை ஈரான் நிராகரித்தது. அமெரிக்காவுடனான அமைதி ஒப்பந்தத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கான முயற்சிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று ஈரான் தெரிவித்துள்ளது. அமெரிக்கா - ஈரான் இடையேயான போர் கடந்த பிப்ரவரி மாதம் வெடித்தது. இருநாடுகளுக்கும் இடையேயான மோதலால் எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது. சர்வதேச நாடுகள் இதில் கடும் பாதிப்பை சந்தித்தன.

இதையடுத்து, கடந்த ஜூன் மாதம் அமெரிக்கா - ஈரான் நாடுகளுக்கு இடையே இடைக்கால ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. போர் நடவடிக்கைகளை நிறுத்தி, நீண்டகால அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு அந்த ஒப்பந்தம் வழிவகுத்தது. ஆனால், இருதரப்பும் தங்களது நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை என்று ஒருவரையொருவர் குற்றம்சாட்டியதால் ஒப்பந்தம் முறிந்தது. இதையடுத்து ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் மூடுவதாக ஈரான் அறிவித்தது. அனால், ஜலசந்தியை மீண்டும் திறக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. அதே நேரத்தில், அமெரிக்கா தனது நிபந்தனைகளை நிறைவேற்றும் வரை ஹார்மூஸ் ஜலசந்தியை திறக்க முடியாது என்று ஈரான் திட்டவட்டமாக கூறி வருகிறது. இதற்கிடையே, ““ஹார்முஸ் ஜலசந்தி மீது அமெரிக்கா தனது முழு கட்டுப்பாட்டை கொண்டுள்ளது.அதை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வோம்““ என அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியிருந்தார்.



டிரம்ப்பின் இந்த கூற்றை ஈரான் நிராகரித்துள்ளது. இது குறித்து ஈரான் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் தலைவர் மொஹ்சென் ரெஸாயி கூறுகையில், அமெரிக்கா அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் வரை, முக்கியத்துவம் வாய்ந்த ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முழுமையாக மீண்டும் திறக்காது. ஈரான் தனது நிலைப்பாட்டில் தெளிவாக உள்ளது. அமெரிக்கா போரை முடிவுக்குக் கொண்டுவந்து, ஈரானின் முடக்கப்பட்ட சொத்துக்களை விடுவிக்க வேண்டும். மேலும், பிராந்தியம் முழுவதும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொள்ளும் வரை ஹார்முஸ் ஜலசந்தி மீண்டும் திறக்கப்படாது. ஹார்முஸ் ஜலசந்தி அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ளது என்று அமெரிக்க அதிகாரிகள் கூறும் கூற்றுகளும், மீண்டும் மீண்டும் வெளியிடும் பதிவுகளும் உண்மையான நிலையை மாற்றிவிடாது” என்றார்.

# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் ஆடிப்பூர கஞ்சிக்கலச சிறப்பு பூசை

குருவடி சரணம்

திருவடி சரணம்





**மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும்
மேல்மருவத்துர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்**

11-08-2026 அன்று கடைசி ஆடிச் செவ்வாய்க்கிழமை
அத்துடன் காலை ஆடிஅமாவாசை சிறப்பு பூசையுடன் தந்தையின்
நினைவுநாளை முன்னிட்டு உரிய முறையில் விரதம் இருந்து வருகின்ற
பக்தர்கள் மனதில் 'லட்சுமிகரம்" வந்து சேரும் என்கிறார் அன்னை.
சிறப்பான முறையில் மகே'வரபூசையும் நடைபெறும்.
14-08-2026 வெள்ளி ஆடிப்பூர வழிபாடு.
16-08-2026 ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணி முதல் ஆடிப்பூர
கஞ்சிக்கலச சிறப்பு பூசைகள் நடைபெற்று 11:00 மணியளவில்
கஞ்சிக்கலசம் வீதிவலம் நடைபெற்று சிறப்பு ஆராதனை நடைபெற்று
மகேஸ்வர பூசையுடன் முடிவடையும்.
அனைத்து சக்திகளையும்
அன்னையின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
ஆடிப்பூரகஞ்சி எடுப்பவர்கள் முன்கூட்டியே அறிவித்தும்
பதிவுசெய்யலாம்.
அன்னைக்கு வேண்டிய பூ, தேசிக்காய் மற்றும்
பூசைப்பொருட்கள் வாங்கிக் கொடுத்து
அன்னையின் ஆசியைப் பெற்றுக்கொள்ளலாம்.
21-08-2026 வெள்ளிக்கிழமை மாலை வரல'மி பூசை சிறப்பான
முறையில் நடைபெறும் அனைவரும் பங்குபற்றி அன்னையின்
அருளாசியைப் பெற்றுக்கொள்ளவும்.
தொண்டு செய்பவர்களும் பங்குபற்றலாம்.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**





11/24



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND
INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US



**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

ontarioliberal.ca/ssw | @ontarioliberalparty

ஸ்கார்பரோ மக்களே!
உங்கள் மாகாண அரசிடமிருந்து
நீங்கள் இன்னும் அதிகமாகப் பெறுவதற்குத்
தகுதியானவர்கள்.

டக் ஃபோர்டின் 8 ஆண்டு ஆட்சிக்குப் பின்னர்,
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
குடும்பங்கள் அதிகமாகச் செலுத்துகிறார்கள்,
நீண்ட காலம் காத்திருக்கிறார்கள்,
மேலும் எதிர்பார்ப்பதிலும் பார்க்க குறைவாகவே
பெறுகிறார்கள்.

அஹ்சானுல் ஹாஃபிஸ்
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
உங்களுக்கான
வேட்பாளர்

*Authorized by the Scarborough Southwest Riding Association

LIBERAL

AHSANUL
HAFIZ

THE CANDIDATE
FOR YOU IN
SCARBOROUGH
SOUTHWEST



JJ Rental
கதிரை மேசை வாடகைக்கு
416.553.1540 | 647.960.1415



உங்கள் வீட்டு வைபவங்களுக்குத் தேவையான கதிரைகள், மேசைகள்,
பார்க் ஒன்றுகூடலுக்கு வேண்டிய கதிரைகள், மேசைகள், TENTS, BBQ மிஷின்
GAS அடுப்புகள் அனைத்தும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
416.553.1540 | 647.960.1415

## வீணாவின் கவிக்கணை

யார் யாரோ
வந்து விளையாட
நம் வாழ்க்கை ஒன்றும்
விளையாட்டு மைதானம் அல்ல,
இதை அடுத்தவர்
புரிந்துகொள்வதை விட,
முதலில் நாம்
புரிந்துகொண்டால்
தேவையற்ற
இன்னல்களைத்
தவிர்த்துக்கொள்ளலாம்.




# ஆட்சியில் மாறும் முகங்கள்! அரசியலில் மாறாத குணங்கள்!

***"6 தமிழ்பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பில் தமிழ், முஸ்லிம், மலையக பிரதிநிதிகளினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள், குற்றச்சாட்டுக்கள், வலியுறுத்தல்களை கவனத்தில் எடுக்காது பூசி மெழுகி பதிலளித்து அனுப்பிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அதே வார பாராளுமன்ற அமர்வுகளில் தனது அமைச்சர்களை வைத்தே தமிழ் தரப்புக்களின் கோரிக்கைகள், வலியுறுத்தல்களை முற்று முழுதாகவே நிராகரித்து விட்டார்"***

**கே.பாலா -**

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆட்சியாளர்கள் மாறினாலும், தமிழ் மக்களின் விதியிலும் உரிமைகளிலும் எந்தவொரு மாற்றமும் நிகழவில்லை என்பதை தற்போதைய அரசியல் சூழல் மீண்டும் நிரூபித்துள்ளது. தேர்தல் பிரசாரங்களின் போது தமிழ் மக்களின் நீண்டகால இனப்பிரச்சினை, நில ஆக்கிரமிப்பு, காணாமல்போனோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் அன்றாட வாழ்வியல் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதாகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் இன்று அதிகாரத்தின் நிழலில் கரைந்து போயுள்ளன. புதிய திசையில் பயணிக்கலாம் என்ற நம்பிக்கையோடு காத்திருந்த தமிழ் சமூகம், மீண்டும் ஒருமுறை வாக்குறுதிகளின் போர்வையில் திட்டமிட்டு ஏமாற்றப்படும் கசப்பான வரலாற்றையே தற்போதைய அரசாங்கத்திலும் எதிர்கொண்டு நிற்கிறது.

அரசியல் மேடைகளில் முழங்கப்படும் வாக்குறுதிகளுக்கும், அதிகார நாற்காலியில் அமர்ந்த பின் நடைமுறைப்படுத்தப்படும் செயல்களுக்கும் இடையிலான இடைவெளி இலங்கை அரசியலில் புதிதொன்றல்ல. இருப்பினும், ”மாற்றம்” என்ற ஒற்றைச் சொல்லைக் கையில் எடுத்துக்கொண்டு ஆட்சி பீடம் ஏறிய தேசியமக்கள் சக்தி (என்.பி.பி.) - மக்கள் விடுதலைமுன்னணி (ஜே.வி.பி.)தலைவரான ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கமும் அதே பழைய பாதையிலேயே பயணிக்கின்றது.

மாற்றத்தையும் நீதியையும் மூலதனமாகக் கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக்கூட முன்னெடுப்பதில் காட்டும் மெத்தனப் போக்கும் மௌ-னமும், அவர்கள் தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர் என்பதனையே உறுதிப்படுத்துகின்றது. வாக்குறுதிகள் என்பவை நிறைவேற்றப்படுவதற்காகக் கொடுக்கப்படுபவையா அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தந்திரக் கருவிகளா என்ற கேள்வி, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் வலுப்பெற்றுள்ளது.

அநுரகுமார திசாநாயக்க அரசு மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையிழப்புக்கு ஆகப்பிந்திய உதாரணமாக தமிழ்பேசும் மக்களின் நலனை முன்னிறுத்தி இணைந்து செயற்படுவதற்கு உடன்பட்டிருந்த இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய 6 தமிழ்பேசும் அரசியல் கட்சிகளின் கூட்டின் பிரதிநிதிகளும் அண்மையில் ஜனாதிபதியை சந்தித்து தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியபோது அவர் வெளிப்படுத்திய கருத்துக்கள், காட்டிய அக்கறையின்மை, வழங்காத உறுதிமொழிகள், தட்டிக்கழிப்புக்கள் என்பனவும் அதன் தொடராக அவரது அரசாங்கத்தின் அமைச்சர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களும் உள்ளன.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பில் அதன் பொது செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.இரா.சாணக்கியன் ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி சார்பில் சுரேஷ் பிரேமசந்திரன், அதன் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முருகேசு சந்திரகுமார், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் அமீர் அலி, பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் தாஹிர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அதன் பொது செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான் வே.இராதாகிருஷ்ணன் மற்றும் பாரத் அருள்சாமி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இச்சந்திப்பில் விசேடமாக புதிய அரசியலமைப்பு உருவாக்கம் பற்றி விரிவாகப் பேசப்பட்டது. தேசிய மக்கள் சக்தி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த வாக்குறுதிக்கு அமைவாக புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாமை மற்றும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படாமை என்பன தொடர்பில் தமிழ்பேசும் கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் அதிருப்தி வெளியிட்டனர். அதேபோன்று நீண்டகாலமாக நிலுவையிலுள்ள மாகாணசபைத்தேர்தல்களை விரைவாக நடத்துமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்திய தமிழ்பேசும் கட்சிகளின் பிரதிநிதிகள், தற்போது பழைய முறையில் தேர்தலை நடத்துமாறும், அதன் பின்னர் அடுத்த பதவிக்காலம் வரையுள்ள இடைவெளியில் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் தீர்மானமொன்றுக்கு வரமுடியும் என்றும் எடுத்துரைத்தனர். அதனைத்தொடர்ந்து வடக்கு,கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள்,மலையக மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பாக 6 தமிழ் கட்சிகளின் கூட்டு பிரதிநிதிகள் கொஞ்சம் காரசாரமான கருத்துக்களை முன்வைத்தனர்.

6 தமிழ் கட்சிகளின் கூட்டு பிரதிநிதிகளின் கருத்துக்கள், குற்றச்சாட்டுக்கள், வேண்டுகோள்கள், வலியுறுத்தல்களுக்கு பதிலளித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அதிகாரப் பகிர்வு மற்றும் புதிய அரசியலமைப்பு மாற்றம் குறித்து உடனடித் தீர்வைக் கொடுக்காமல் ”தேசிய இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும்” என்ற பெயரில் கால அவகாசம் கோரி பிரச்சினையை காலவரையறையின்றி தள்ளிப்போடும் வழக்கமான உத்தியையே கையாண்டுள்ளார். தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வின் முதன்மை அடையாளமான மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்தக் கோரிய போது, அது தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவை சுட்டிக்காட்டி மீண்டும் ஒரு இழுத்தடிப்பு அரசியலை மேற்கொண்டார். வடக்கு-கிழக்கில் தொடரும் தொல்லியல், வனவளத் திணைக்களங்களின் நில ஆக்கிரமிப்பு மற்றும் இராணுவ வசமுள்ள காணி விடுதலை போன்ற உடனடி கவனத்திற்குரிய பிரச்சினைகளுக்குத் தெளிவான நடைமுறை சாத்தியமான தீர்வையோ, காலக்கெடுவையோ ஜனாதிபதி வழங்கவில்லை.

மலையக மக்களின் காணி உரிமை குறித்துப் பேசப்பட்ட போது, பெருந்தோட்டக் குத்தகை ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படும் 2042-ஆம் ஆண்டிற்குள் தீர்வு காணப்படும் எனக் கூறி, அவர்களின் தற்போதைய அவசர வாழ்வாதாரக் கோரிக்கைகளை ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களுக்கு அப்பால் தள்ளிப் போட்டுள்ளார். தமிழ் மக்களின் அரசியல் உரிமை சார்ந்த கட்டமைப்பு ரீதியான கோரிக்கைகளை ஏற்காமல், வழக்கமான அபிவிருத்தி மற்றும் பொருளாதார உதவிகள் மூலமே சிக்கல்களைத் தீர்க்க முடியும் என்ற பிம்பத்தை உருவாக்கவே ஜனாதிபதி இந்த சந்திப்பில் முயற்சித்துள்ளார்.

6 தமிழ்பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான இந்த சந்திப்பு கடந்த 3 ஆம் திகதி கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிலையில் அதில் தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி ஏமாற்றத்தை கொடுத்த நிலையில் 4 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை கூடிய பாராளுமன்ற அமர்வுகளில் அமைச்சர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் வெளிப்படுத்திய கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு விசனத்தையும் அரசாங்கம் மீதான வெறுப்பையும் ஜனாதிபதி மீதான நம்பிக்கையின்மையையுமே அதிகரித்துள்ளது.

பாராளுமன்றத்தில் 4 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யுமான இரா. சாணக்கியன் 27/2இல் எழுப்பிய இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளித்த பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, வடக்கில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 16 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குள் இராணுவத்தினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் காணிகள், அப்பகுதிகளின் பாதுகாப்புக்கும் மூலோபாய முக்கியத்துவத்திற்கும் அவசியமான காணிகள் .எனவே அவற்றை விடுவிக்க முடியாது. அத்துடன் பலாலி சர்வதேச விமான நிலையத்தைக் கொண்டுள்ள உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இலங்கை விமானப் படையினரால் பயன்படுத்தப்படும் 774.98 ஏக்கர் காணிகளையும் விடுவிக்க முடியாது என உறுதிபடத்தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு கனகாம்பிகை அம்மன் கோவில் விரிவாக்கத்திற்காகக் கோரப்பட்ட காணித் துண்டு, தற்போது இலங்கை இராணுவத்தின் 1 வது படையணியின் பயன்பாட்டு காணி. இது முன்னர் கிளிநொச்சி பாதுகாப்புப் படைத் தலைமையகத்தால் பயன்படுத்தப்பட்டது. கோவில் விரிவாக்கத்திற்காக கோரப்பட்ட காணித் துண்டு, பொதுமக்களின் உரிமையிலிருந்து இலங்கை இராணுவத்தால் பொறுப்பேற்கப்பட்ட ஒரு காணித் துண்டு. கட்டிடங்கள் மற்றும் பிற கட்டுமானங்களுக்காக இராணுவ நிதியிலிருந்து செலவழிக்கப்பட்ட 8,466,355.64 ரூபா தொகையை மீளப்பெற்ற பின்னர், குறித்த காணித் துண்டை இலங்கை இராணுவத்தின் பயன்பாட்டிலிருந்து விடுவிக்க முடியும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு பகுதியில் தற்போது இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்டு வரும் அரசாங்கத்திற்கும் சிவில் மக்களுக்கும் சொந்தமான காணிகள் தொடர்பில், எல்லைக் குறியீடு மற்றும் அளவீட்டுத் திட்டங்களைப் பெறும் நடைமுறையின் போது, 55 சிவில் காணி உரிமையாளர்களில் 44 பேர் மாத்திரமே தமது அசல் காணிகளுக்குப் பதிலாக மாற்றுக் காணிகளை ஏற்றுக்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்தனர். விருப்பம் தெரிவித்த 44 நபர்களுக்கு அரசாங்கம் கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தில் தலா 40 பேர்ச்சஸ் கொண்ட மாற்று நிலத் துண்டுகளை வழங்கி வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது.

மேலும், மாற்று நிலங்களையும் வீடுகளையும் ஏற்றுக்கொள்ளாத 11 பொதுமக்களிடம், தங்களுக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் நிலத் துண்டுகளுக்கு அரசாங்கத்தால் மதிப்பிடப்பட்ட மதிப்பின் அடிப்படையில் நஷ்டஈட்டைப் பெற்றுக்கொண்டு, அந்நிலங்களை இலங்கை இராணுவத்திற்குப் கைமாற்ற ஒப்புக்கொள்வார்களா என்பதைச் கண்டறியுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டது. அதன்படி, பிரதேச செயலகம் அவர்களிடம் இது குறித்து விசாரித்த போதிலும் அவர்கள் அதற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை. எனவே, கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தில் காணிகளையும் வீடுகளையும் ஏற்றுக்கொள்ளாத 11 பொதுமக்கள் முன்னர் உரிமை கோரிய காணிகளின்

அளவிற்கான நிலத் துண்டுகளை, இலங்கை இராணுவ முகாமால் பயன்படுத்தப்பட்டுள்ள எஞ்சிய பகுதியில் ஒதுக்கித் தர முடியும் என்றும் அறிவித்தார்.

அதே தினம் பாராளுமன்றத்தில் இரா. சாணக்கியன் எம்.பியால் எழுப்பப்பட்ட இனவிகிதாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்கம் கொண்ட கிவுல் ஓயாத்திட்டம், கிழக்கு மாகாண மக்களின் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைதொடர்பான் பிரச்சினைகளுக்கு பதிலளித்த கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ.லால்காந்த, கிவுல்ஓயா திட்டம் எக்காரணம் கொண்டும் இடைநிறுத்தப்படாது தொடர்ந்து முன்னெடுக்கப்படும். அதேவேளை கிழக்கு மாகாணத்தில் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை என்ற ஒரு இடமே இல்லை என்று வெளியிட்ட அறிவிப்பு தமிழ் தரப்புகளுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது.

அதுமட்டுமன்றி இலங்கையின் எந்தவொரு சிறைச்சாலைகளிலும் தமிழ் அரசியல் கைதிகள் என்ற எவருமே கிடையாது. குற்றவாளிகளும் குற்றங்களுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களும்தான் உள்ளனர் என நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார, பிரதி வெளிவிவகார அமைச்சர் அருண் ஹேமச்சந்திர ஆகியோரின் அறிவிப்பும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்ற கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவே இருந்தது.

6 தமிழ்பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான கடந்த 3 ஆம் திகதி சந்திப்பில் தமிழ் முஸ்லிம், மலையக பிரதிநிதிகளினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள், குற்றச்சாட்டுக்கள், வலியுறுத்தல்களை கவனத்தில் எடுக்காது பூசி மெழுகி பதிலளித்து அனுப்பிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அதே வார பாராளுமன்ற அமர்வுகளில் தனது அமைச்சர்களை வைத்தே தமிழ் தரப்புக்களின் கோரிக்கைகள், வலியுறுத்தல்களை முற்று முழுதாகவே நிராகரித்து விட்டார்.

அரசியல் மாற்றத்தை எதிர்நோக்கி நம்பிக்கையுடன் காத்திருந்த தமிழ் சமூகத்திற்கு, வாக்குறுதிகளைக் காற்றோடு காற்றாகப் பறக்கவிடும் அணுகுமுறையே மீண்டும் பதிலாக்கப்பட்டுள்ளது வரலாறு முழுவதும் ஆட்சியாளர்களின் பெயர்களும் முகங்களும் மாறியிருக்கலாமே தவிர, தமிழ் மக்களின் மீதான அணுகுமுறையும் ஏமாற்றங்களின் பின்னணியும் மாறவே இல்லை என்பதை தற்போதைய சூழல் தெள்ளத்தெளிவாக உணர்த்துகிறது.

“மாற்றம்” என்ற முழக்கத்துடன் வந்த அரசாங்கமும் தமிழ் மக்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் கையாள்வதில் மாற்றமின்றி பழைய பாதையையே தேர்ந்தெடுத்துள்ளது.காலம் காலமாகத் தொடரும் இந்த வாக்குறுதி அரசியல், தமிழ் மக்கள் மத்தியில் அரசுகளின் மீதான எஞ்சியிருந்த நம்பிக்கையையும் முற்றாகச் சிதைத்துவிட்டது. இனியும் வாக்குறுதிகளையும் கால அவகாசங்களையும் மட்டுமே நம்பிக்கொண்டிருக்காமல், தமிழ் சமூகம் தங்கள் நியாயமான உரிமைகளுக்காகத் தீர்க்கமாகவும் உறுதியாகவும் குரல் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை இந்த ஏமாற்றங்கள் மீண்டும் நிரூபித்துள்ளன.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் வெள்ள அபாயத்தில் இருந்து மக்களை பாதுகாக்க தயாராக இருக்க வேண்டும் என ஆளுநர் தெரிவிப்பு!

பு. கஜிந்தன்

குறுகிய காலத்தில் அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகி வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என காலநிலை முன்னறிவிப்புகள் வெளியாகி வருகின்ற நிலையில், அதனை எதிர்கொள்ள வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் மனிதவளம், நிதி, வாகனங்கள் மற்றும் அவசரகால உபகரணங்களுடன் முழுமையான தயார்நிலையில் இருக்க வேண்டியது அவசியம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சுகளின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் 11ம் திகதி திங்கட்கிழமை அன்று (11.08.2026) ஆளுநர் செயலகத்தில் ஆளுநரின் தலைமையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், தெருநாய்களுக்கான கருத்தடைச் சிகிச்சை வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் லஞ்சீற் பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. லஞ்சீற் பாவனையைக் கட்டுப்படுத்துவதில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், அதனை மேலும் வலுப்படுத்த வேண்டிய தேவை இருப்பதாக ஆளுநர் சுட்டிக்காட்டினார். இதற்கமைய, 2027ஆம் ஆண்டு தொடக்கம் மேலும் கடுமையான அமுலாக்க நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார்.

அத்துடன், வலிகாமம் தெற்கு மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேசங்களில் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான குளங்களை உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாகத் தூர்வாருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆளுநருக்கு அறிவித்தார்.

கட்டட அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட வரைபடங்களுக்கும் நடைமுறையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக குடிபுகு சான்றிதழ்களை வழங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும், கட்டட அனுமதிக்கு முரணாக அமைக்கப்பட்ட கட்டுமானங்களுக்கு எதிராக உள்ளூராட்சி மன்றங்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தின் முதல் வாரத்திலிருந்து வடகிழக்கு பருவமழை தாக்கம் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதால், இடர்நிலை முகாமைத்துவத்துக்குத் தேவையான அனைத்து முன்னாயத்தங்களையும் மேற்கொள்ளுமாறு ஏற்கனவே உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார். அவசரநிலைக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள், வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை தயார்நிலையில் வைத்திருக்குமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

“பிராஜா சக்தி“ வேலைத்திட்டத்தின் கீழ் மாகாண சபைக்குச் சொந்தமான வீதிகள் மற்றும் கட்டடங்களைப் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அதே பணிகள் ஏனைய நிதி மூலங்களின் கீழ் மீள இடம்பெறாதவாறு திட்டங்களை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துமாறு ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, உள்ளூராட்சி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டது. இரண்டாம் கட்ட வீடமைப்புத் திட்டம், டிட்வா மீள்கட்டுமானத் திட்டம், நிரல் அமைச்சு மற்றும் மாவட்டச் செயலகங்கள் ஊடான நிதி ஒதுக்கீடுகளின் கீழ் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் திருப்திகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அதேவேளை, உள்ளூராட்சி மன்றங்கள் தங்களது தொழில்நுட்பக் கொள்ளளவை மீறிய அளவில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருவதாகவும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள் சுட்டிக்காட்டினர்.



உள்ளூராட்சி மன்றங்களுக்கு சேவைகளைப் பெற வருகை தரும் பொதுமக்களை கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்துமாறு அலுவலர்களுக்கு தெளிவான அறிவுறுத்தல்களை வழங்குமாறும் ஆளுநர் வலியுறுத்தினார். இது தொடர்பாக தனக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.


வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில், வீதிப் பணிகளுக்குத் தேவையான தாரைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் சிக்கல்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட சிலர் கடமைகளைப் பொறுப்பேற்காத நிலை குறித்தும் ஆராயப்பட்டதுடன், அவற்றுக்கான தீர்வு நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.


தொடர்ந்து கிராமிய அபிவிருத்தித் திணைக்களம், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்திப் பணியகம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாட்டு முன்னேற்றங்களும் விரிவாக மீளாய்வு செய்யப்பட்டன.

தற்போதைய காலப்பகுதி வடக்கு மாகாணத்துக்கு அதிகளவிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாவிகள் வருகை தரும் பருவமாக இருப்பதால், தமது எல்லைக்குட்பட்ட சுற்றுலாத் தலங்களின் தூய்மையை உறுதிப்படுத்துவதில் உள்ளூராட்சி மன்றங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என ஆளுநர் அறிவுறுத்தினார். மேலும், பொதுமக்கள் பொது இடங்களில் குப்பைகளை கொட்டும் சம்பவங்கள் தொடர்பான சி.சி.ரி.வி. காணொலிப் பதிவுகளை உரிய பொலிஸ் நிலையங்களுக்கு விரைவாக அனுப்பி சட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறும் அவர் பணிப்புரை வழங்கினார்.

இதனுடன், ஜனாதிபதி செயலகத்தின் கீழ் இயங்கும் தூய்மை இலங்கை செயலணி வழங்கியுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக, வடக்கு மாகாணத்திற்கான ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவ செயற்றிட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள் (நிதி, நிர்வாகம், திட்டமிடல் மற்றும் பொறியியல்), உள்ளூராட்சி ஆணையாளர், திட்டமிடல் பணிப்பாளர், மாநகர சபை ஆணையாளர்கள், நகர சபைகளின் செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், பொறியியலாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News



# தேசிய மக்கள் சக்தி அரசின் கீழ் உன்னதமான நிலையில் இந்திய – இலங்கை உறவுகள்

## காயத்ரி விக்கிரமசிங்க - கொழும்பு மாநகர சபையின் தமிழ் பேசும் உறுப்பினர்

இலங்கையின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு ஹைதராபாத்தில் உள்ள கிராமிய அபிவிருத்தி மற்றும் பஞ்சாயத் ராஜ் தேசிய நிறுவனத்தில் பயிற்சியளிக்கும் இந்திய திட்டம் மிகுந்த பயனுடையதாக இருக்கிறது. இந்தியாவில் ஊராட்சி அமைப்புகள் குறிப்பாக அடிமட்டத்தில் பஞ்சாயத் சபைகள் இயங்குகின்றன முறை இலங்கையும் பின்பற்றக் கூடிய ஒன்றாகும்.

எமது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோருக்கு இந்தியாவில் அதிஉயர் வரவேற்பும் கௌரவமும் வழங்கப்பட்டுள்ளது. எமது உறவுகள் உன்னத நிலையில் இருக்கின்றன. இந்திய அரசு எமக்கு வழங்கிய சில உதவிகளை தனது அறிக்கையில் நினைவு கூர்ந்தார்.

இலங்கை நான்கு வருடங்களுக்கு முன்னர் எதிர்நோக்கிய முன்னென்றுமில்லாத பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவருவதற்கு முதலில் உதவியது சர்வதேச நாணய நிதியம் அல்ல, இந்தியாவே என்று கொழும்பு மாநகரசபையின் தேசிய மக்கள் சக்தி உறுப்பினரான காயத்ரி விக்கிரமசிங்க தென்னிந்தியாவின் ஹைதராபாத் நகரில் இலங்கையின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு ஹைதராபாத்தில் உள்ள கிராமிய அபிவிருத்தி மற்றும் பஞ்சாயத்து ராஜ் தேசிய நிறுவனத்தில் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் சென்றிருக்கும் மூன்றாவது உள்ளூராட்சி உறுப்பினர்கள் குழுவில் ஒருவரான காயத்ரி விக்கிரமசிங்க பயிற்சி நெறியில் கலந்து கொண்டு கொழும்பு நாடு திரும்பிய பின்னர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த வருட பிற்பகுதியில் இலங்கையை தாக்கிய டித்வா சூறாவளியின் விளைவான பாதிப்புக்களில் இருந்து மீண்டுவருவதற்கும் சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளை சீரமைப்பதற்கும் இந்திய அரசாங்கம் இதுவரையில் 14,850 கோடி இலங்கை ரூபாவை செலவிட்டிருக்கிறது.

இந்த தொகையில் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இந்திய கடன் திட்டங்களின் கீழும் மேலும் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவித் திட்டத்தின் கீழும் வழங்கப்பட்டிருக்கிறது.

நான்கு வருடங்களுக்கு முன்னர் இலங்கை எதிர்நோக்கிய பாரதூரமான பொருளாதார நெருக்கடியில் இருந்து எங்களைக் காப்பாற்றியது உண்மையில் சர்வதேச நாணய நிதியம் அல்ல. அந்த நிதியம் சில மில்லியன் டொலர்களை மாத்திரமே வழங்கியது.

இந்தியா வழங்கிய 4 பில்லியன் டொலர்கள் கடனுதவிதான் இலங்கையை தாங்கிப் பிடித்தது. தொடர்ந்தும் பல்வேறு திட்டங்களின் கீழ் இந்தியா இலங்கை மக்களின் மேம்பாட்டுக்கு உதவி வருகிறது. குறிப்பாக, இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்வாதார முயற்சிகள் என்று பல்வேறு துறைகளில் இந்திய அரசாங்கம் பெருவாரியான உதவிகளைச் செய்து வருகிறது. இதற்கு நாம் என்றென்றைக்கும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

முன்னைய அரசாங்கங்களை விடவும் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மலையக தமிழ் மக்களின் குறிப்பாக தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை முன்னெடுப்பதில் ஆர்வமாக செயற்படுகிறது.

தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ்தான் முன்னெப்போதையும் விட இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் உன்னதமான நிலையில் இருக்கின்றன.

இன்றைய அரசாங்கம் சகல சமூகங்களையும் சமத்துவமாக நடத்தும் கொள்கைகளைக் கொண்டது. அத்துடன் மீண்டும் இனவாதமும் மதத்தீவிரவாதமும் மீண்டும் தலையெடுக்க அனுமதிக்கப் போவதில்லை என்றும் அரசாங்கம். சூளுரைத்திருக்கிறது. இன்று இலங்கையில் இனங்களுக்கு இடையிலான உறவுகள் மிகவும் சிறப்பான முறையில் இருக்கிறது.



இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா அவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தை தனக்கு வழங்கிய கொழும்பு மாநகர சபை முதல்வர் விராய் கெலி பல்தஸார் அவர்களுக்கும் தனது நன்றியை தெரிவித்துள்ளார்.



2012 ஆம் ஆண்டு "இந்தியாவை அறிந்து கொள்ளுங்கள்" நிகழ்ச்சித் திட்டத்திலும் 2021 ஆம் ஆண்டு "ஜனநாயக மரபுகளை பேணுதல்" நிகழ்ச்சி திட்டத்திலும் இந்திய அரசின் அழைப்பின் பேரில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

# நல்ல தீர்மானமும் கவனிக்கப்படாத முக்கிய விடயங்களும்

**- ந.லோகதயாளன்**

போரின் காரணமாக முறையான ஆவணங்களின்றி இந்தியாவுக்குச் சென்று ஏதிலிகளாகப் வாழும் இலங்கையர்கள், மீண்டும் தாயகம் திரும்புவதற்குத் தேவையான குடிவரவு தடையகற்றல் வசதிகளை வழங்குவதற்கு இலங்கை அரசின் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சரினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கே 2026-08-11 அமைச்சரவை இந்த ஒப்புதலை அளித்துள்ளது.

அதாவது யுத்த காலத்தில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக, அங்கீகரிக்கப்பட்ட துறைமுகங்கள் மூலமன்றியும் முறையான கடவுச்சீட்டுகள் இன்றியும் தமது உயிரை காக்க இந்தியாவுக்குச் சென்ற பலர் அங்கு ஏதிலிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஐக்கிய நாடுகள் ஏதிலிகள் உயர்ஸ்தானிகராலயத்தின் (UNHCR) ஊடாகத் தன்னார்வமாக மீண்டும் தாயகம் திரும்ப எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

இவர்களை, சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்கு அமைய தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன.

அதில் 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் முறையான ஆவணங்களின்றி இந்தியாவுக்குச் சென்று, அங்குள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் இலங்கையர் என அடையாளப்படுத்தப்பட்ட நபர்களுக்கு, அரசு உளவுத்துறையின் தடையகற்றல் அறிக்கை பெறப்படும்.

இவர்கள் கொலை, தேசத்துரோகம் போன்ற கடுமையான குற்றங்களில் ஈடுபடாதவர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே நாட்டிற்குள் அனுமதிக்கப்படுவர்.

தொடர்புடைய நபர்களுக்குத் தற்காலிகப் பயண ஆவணங்கள் வழங்கப்பட்டு, 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாமல், அங்கீகரிக்கப்பட்ட வழிகள் ஊடாக நாட்டிற்குள் நுழைவதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் யுத்தம் நிறைவடைந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்தவர்களுக்கும், அடையாளப் படுத்தல் மற்றும் உளவுத்துறை தடையகற்றல் அறிக்கையின் அடிப்படையில் சட்ட நடவடிக்கைகளின்றி நாட்டிற்குள் நுழையச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

அதேவேளை, கொலை மற்றும் தேசத்துரோகம் உள்ளிட்ட குற்றங்களுடன் தொடர்புடைய நபர்கள் அடையாளம் காணப்பட்டால், அவர்கள் துறைமுகம் அல்லது வானூர்தி நிலையத்திலேயே தடுத்து வைக்கப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தமிழகத்தில் தங்கியுள்ள பலர் தாயகம். திரும்ப முன் வருவர் என்பதில் ஐயம் இல்லை. இருந்தபோதும் இந்த தீர்மானத்தில் முக்கியமாக கவனிக்க வேண்டிய பல விடயங்களை ஆராயாது கொண்டு வரப்பட்ட தீர்மானம் என்ற விமர்சனமும் உள்ளது.

இதில் தாயகம் திரும்ப விரும்பும் தம்மை விமானங்கள் ஊடாக அன்றி தனியான கப்பலில் எடைகளின் வரையறையின்றி அனுப்பி வைக்க வேண்டும் என்று தமிழகத்தில் உள்ள மக்கள் நீண்டகாலமாக முன் வைக்கப்படும் கோரிக்கை தொடர்பில் எந்தவொரு கரிசணையும் கொள்ளப்படவில்லை என்பது ஓர் அம்சமாகும்.

இவற்றிற்கு அப்பால் முறையான ஆவணங்கள் இன்றி துறைமுகங்கள் வழியாக அன்றி பயணித்தவர்கள் என வரையறுப்பதன் மூலம் கடல் வழியாக படகுகள் மூலம் பயணித்தவர்கள் என்பது வெளிப்படுகின்றது. தமிழகத்திலே இரு வகையான ஈழ அகதிகள் தங்கியுள்ளனர். அதிலே படகுகள் வழியாக சென்று நேரடி அகதிகள் பதிவின் மூலம் தமிழக அரசினால் பராமரிக்கப்படும் முகாம்களில் சுமார் 60 ஆயிரம் மக்கள் தங்கியுள்ளனர்.

இவற்றினை விடவும் கடவுச் சீட்டுகள் மூலம் பயணித்து போரின் காரணமாக அல்லது அச்சம் காரணமாக தாயகம் திரும்பாது தமிழக பொலிஸாரிடம் பதிவுகளை மேற்கொண்டு முகாம்களிற்கு வெளியில் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் மட்டுமன்றி வாடகை வீடுகளில் என சுமார் 30 ஆயிரம் மக்கள் தங்கியுள்ளனர்.

இவர்கள் தாயகம் திரும்ப முன் வரும்போது இவர்களிற்கான விமானச் சிட்டைகளும் வழங்கப்படுவதும் கிடையாது என்புடன் இந்தியாவில் விசா காலாவதியான காலத்திற்கு ஆண்டிற்கு 3,500 ரூபா (இந்திய நாணயம்) குற்றப்பணம் அறவிடப்படுவது மட்டுமன்றி இந்தியாவின் பல இடங்களிற்கும் நீண்ட காலம் அலைய்ந்தே அனுமதியை பெறுவதை எண்ணியே பலர் பயணத்தை வெறுக்கின்றனர்.

ஏனெனில் அதிகமானோர் குறைந்தபட்சம் 20 ஆண்டுகள் தங்கியுள்ளனர் எனில் ஒருவர் 70 ஆயிரம் ரூபாவிற்கும் மேற்பட்ட பணத்தை (இந்திய நாணயம்) செலுத்தியே ஆக வேண்டிய கட்டாயம் உள்ளது. இதை செலுத்தாது தாயகம் திரும்புவதானால் புனர்வாழ்விற்கு பதிவு செய்து அதனை ஏற்று, விசாரணைகள் என சுமார் ஓர் ஆண்டு காலம் காத்திருப்பது மட்டுமல்ல பல தடவைகள் நீண்ட அலைச்சலுடன் தமிழகத்தின் சிறப்பு பிரிவு பொலிஸார், கியூப் பிரிவு மற்றும் பிரதேச காவல் நிலையங்களின் அனுமதி என்ற விடயங்களும் உண்டு. தமிழகத்தில் குற்றப் பிண்ணனியிருப்பின் ஆராயப்படலாம் ஆனால் அவை ஓர் இடமாக கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும். இவை அனைத்தும் முடிந்தாலே யு.என்.எச்.சி.ஆரின் விமானச் சிட்டையை பெற முடியும். பலர் தமது சொந்தப் பணத்திலேயே தற்போது தாயகம் திரும்புகின்றனர்.


**Sapphire Banquet & Catering**


**Specializing in Videography & Photography**

- Anniversary Party - Birthdays - Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

சினிமா

# மணிரத்தினம் இயக்கிய "இதயத்தை திருடாதே" படம் ஆகஸ்ட் 28ம் தேதி மீண்டும் வெளியீடாகிறது




மணிரத்னம் இயக்கிய "இதயத்தை திருடாதே" படம் ஆகஸ்ட் 28ம் தேதி மறு வெளியீடாகிறது. மணிரத்னம் இயக்கிய திரைப்படங்களில் சிறப்பான கவனத்தைப் பெற்ற திரைப்படம் "இதயத்தை திருடாதே". நடிகர்கள் நாகர்ஜுனா, கிரிஜா ஷெட்டர் நடிப்பில் 1989 ஆம் ஆண்டு வெளியான இந்தத் திரைப்படம் முழுமையான காதல் திரைப்படமாக எடுக்கப்பட்டது. இது நாகார்ஜுனாவின் "கீதாஞ்சலி" தெலுங்கு படத்தின்பின்னணி படமாகும்.

இத்திரைப்படம் தேசிய விருதையும், நந்தி விருதுகளையும் பெற்றுள்ளது. புற்றுநோயால் பாதிக்கப்பட்டு குறுகிய காலமே உயிர்வாழப் போகும் ஒரு ஆணும் பெண்ணும் காதலிக்கும் அழகான உணர்வுபூர்வமான கதையை இத்திரைப்படம் பேசுகிறது. இசையமைப்பாளர் இளையராஜா இசையமைப்பில் இப்படத்தில் இடம்பெற்ற அனைத்து பாடல்களும் நல்ல வரவேற்பைப் பெற்றன. முக்கியமாக, ஓ பிரியா பிரியா, ஓ பாப்பா லாலி பாடல்கள் இன்று வரை கேட்கப்படும் பாடல்களில் ஒன்றாகவும் இருக்கின்றன. பிசி ஸ்ரீராம் ஒளிப்பதிவில் படமாக்கப்பட்ட காதல் காட்சிகள் ரசிகர்களை ஈர்த்திருந்தன. இந்த நிலையில், 37 ஆண்டுகள் கழித்து "இதயத்தை திருடாதே" படம் தொழில்நுட்ப மெருகேற்றம் செய்யப்பட்டு ஆகஸ்ட் 28 ஆம் தேதி மறு வெளியீடாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அசோக் செல்வன், பிரீத்தி முகுந்தன் நடித்துள்ள புதிய படம் "அன்பில் அவன்"



அசோக் செல்வன், பிரீத்தி முகுந்தன் நடித்துள்ள புதிய படத்திற்கு "அன்பில் அவன்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. தமிழில் "சூதுகவ்வும்" படத்தில் அறிமுகமாகி வித்தியாசமான கதைகளை தேர்வு செய்து நடித்து வருபவர் அசோக் செல்வன். "நித்தம் ஒரு வானம், சில நேரங்களில் சில மனிதர்கள், ஹாஸ்டல், மன்மத லீலை, போர் தொழில்" உள்ளிட்ட படங்களில் இவரின் நடிப்பு பெரிதும் பேசப்பட்டது. "தக் லைப்" படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இதைத்தொடர்ந்து, "சபாநாயகன், ப்ளூ ஸ்டார், பொன் ஒன்று கண்டேன்" கடைசியாக "எமக்கு தொழில் ரொமான்ஸ்" படத்தில் நடித்திருந்தார்.

கடந்த ஆண்டு பிப்ரவரி 9ம் தேதி அசோக் செல்வனின் 23-வது படத்தின் பூஜை நடைபெற்றது. அசோக் செல்வன், பிரீத்தி முகுந்தன் நடித்துள்ள புதிய படத்துக்கு "அன்பில் அவன்" என பெயரிடப்பட்டு தலைப்பு வெளியாகி உள்ளது. "போர் தொழில்" திரைப்படத்தின் இயக்குநர் விக்னேஷ் ராஜா, இந்த படத்தின் கதையை எழுதி உள்ளார். அறிமுக இயக்குநர் கார்த்திகேயன் ராமகிருஷ்ணன் இப்படத்தை இயக்குகிறார்.

"ஓ மை கடவுளே" படத்தின் தயாரிப்பு நிறுவனமான ஹேப்பி ஹை பிக்சர்ஸ் இந்தப் படத்தைத் தயாரித்துள்ளது. இந்தப் படத்துக்கான திரைக்கதையில் விக்னேஷ் ராஜா, ஆர் கார்த்திகேயன், அசோக் செல்வன் இணைந்து பணியாற்றியுள்ளார்கள். இந்தப் படத்தில் நாயகியாக பிரீத்தி முகுந்தன் நடித்துள்ளார். இந்தப் படத்துக்கு கோவிந்த் வசந்தா இசையமைத்து வருகிறார். பீட்டர் ஹெயின் சண்டைப் பயிற்சியில் உருவாகியுள்ள இந்தப் படம் காதல் மற்றும் அதிரடி ஆக்சனில் உருவாகியுள்ளது. இப்படம் அசோக் செல்வனின் 23வது படமாகும்.

# ரஜினிகாந் நடிக்கும் "தர்மன்" படத்தின் 2ம் கட்ட படப்பிடிப்பு தொடங்கியது



ரஜினிகாந் நடிக்கும் "தர்மன்" படத்தின் 2-ம் கட்ட படப்பிடிப்பு தொடங்கியது. நடிகர் ரஜினிகாந்த் தற்போது தனது 173-வது திரைப்படமான "தர்மன்" படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தை "ஓ மை கடவுளே", "டிராகன்" ஆகிய படங்களின் இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து இயக்கி வருகிறார்.

கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் தயாரிக்கும் இந்த திரைப்படம் ஆக்சன் கதைக்களத்தில் உருவாகி வருகிறது. இதில் ரஜினிகாந்த் மருத்துவர் கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

மேலும் இந்த படத்தில், சிம்ரன், ராஷி கன்னா, யோகி பாபு உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். அனிருத் இசையமைக்கும், இந்த படத்துக்கு நிகேத் பொம்மி ஒளிப்பதிவு செய்கிறார். பிரதீப் ஈ ராகவ் படத்தொகுப்பு செய்கிறார். இந்த நிலையில் "தர்மன்" படத்தின் 2-ம் கட்ட படப்பிடிப்பு தற்போது தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதுதொடர்பான அறிவிப்பு காணொளி ஒன்றை வெளியிட்டு படக்குழு அறிவித்துள்ளது.

# துல்கர் சல்மான் நடித்த "ஐ அம் கேம்" படம் செப்டம்பர் 3ம் தேதி வெளியாகிறது

துல்கர் சல்மான் நடித்த "ஐ அம் கேம்" படம் செப்டம்பர் 3-ம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது. மலையாள திரையுலகின் முன்னணி நடிகரான துல்கர் சல்மான் நடிப்பில் உருவாகியுள்ள ஆக்ஷன் திரில்லர் திரைப்படம் "ஐ அம் கேம்". "ஆர்.டி.எக்ஸ்" படப்புகழ் நஹாஸ் ஹிதாயத் இப்படத்தை இயக்கியுள்ளார். இப்படத்தில் துல்கர் சல்மானுடன் ஆண்டனி வர்கீஸ், மிஷ்கின், கயாடு லோஹர், கதிர், பார்த்திவ் திவாரி, சம்யுக்தா விஸ்வநாதன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இயக்குநர் மிஷ்கின் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. ஜேக்ஸ் பிஜோய் இசையமைக்கும் இப்படத்தின் சண்டைக் காட்சிகளை அன்பறிவ் வடிவமைத்துள்ளனர்.

அதிர்ஷ்டத்தை அதிகம் நம்பும் ஒருவர் தனது வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்களை மையமாக வைத்து "ஐ அம் கேம்" திரைப்படம் உருவாகியுள்ளது. துல்கர் சல்மான் மற்றும் ஜாம் வர்கீஸ் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளனர். மலையாளம், தமிழ், தெலுங்கு, இந்தி மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் இப்படம் பான் இந்தியா திரைப்படமாக வெளியாக உள்ளது. "ஐ அம் கேம்" திரைப்படம் ஓணம் பண்டிகையை முன்னிட்டு ஆகஸ்ட் 20-ம் தேதி திரையரங்குகளில் வெளியா-கும் என ஏற்கனவே படக்குழு அறிவித்திருந்தது. இதனால் ரசிகர்கள் படத்தை எதிர்பார்த்து காத்திருந்தனர். இந்த நிலையில், படத்தின் வெளியீடு தேதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அதன்படி, ஆகஸ்ட் 20-ம் தேதிக்கு பதில-ாக செப்டம்பர் 3-ம் தேதி "ஐ அம் கேம்" உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது.



# அனிஷ்மா நடித்த "மொத ராத்திரி" படத்தின் முன்னோட்டம் வெளியானது




அனிஷ்மா நடித்த "மொத ராத்திரி" படத்தின் முன்னோட்டம் வெளியானது. தமிழ் மற்றும் மலையாள திரையுலகில் கவனம் ஈர்த்து வரும் இளம் நடிகைகளில் ஒருவராக இருப்பவர் அனிஷ்மா. கடந்த 2023-ம் ஆண்டு வெளியான மலையாள திரைப்படமான "பூவன்" மூலம் திரையுலகில் அறிமுகமான இவர், சமீபத்தில் வெளியான தமிழ் படங்களான "சிறை" மற்றும் "யூத்" மூலம் தமிழ் ரசிகர்களிடையே பிரபலமானார்.

இந்த நிலையில், மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிப்பில் உருவாகியுள்ள "மொத ராத்திரி" திரைப்படத்தில் அனிஷ்மா கதாநாயகியாக நடித்துள்ளார். "குட் பேட் அக்லி", "டியூட்" ஆகிய படங்களைத் தொடர்ந்து மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் மூன்றாவது தமிழ் திரைப்படம் இதுவாகும். ராஜா கருப்பசாமி இயக்கியுள்ள இப்படத்தில் ரிஷிகாந்த் கதாநாயகனாக நடித்துள்ளார். பரத் ஷங்கர் இசையமைத்துள்ளார். புதிதாகத் திருமணமான ஒரு ஜோடியின் வாழ்க்கையில் நடைபெறும் காதல் மற்றும் நகைச்சுவை சம்பவங்களை மையமாகக் கொண்டு இப்படம் உருவாகியுள்ளது.

"மொத ராத்திரி" படத்தின் முதல்காட்சி பதாகை சமீபத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் கவனம் பெற்றது. இதனைத் தொடர்ந்து படத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களும் அடுத்தடுத்து வெளியாகி வரவேற்பைப் பெற்றன. "மொத ராத்திரி" திரைப்படம் வரும் ஆகஸ்ட் 21-ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதனையொட்டி படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரிக்கும் வகையில், தற்போது முன்னோட்டத்தை படக்குழு வெளியிட்டுள்ளது. காதல் மற்றும் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள இந்த முன்னோட்டம் சமூக வலைதளங்களில் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது.


SURUVIL
PEOPLE'S ASSOCIATION
Summer
Get-together
A DAY OF FOOD, FUN, FRIENDSHIP & MEMORIES!
FAMILIES
FRIENDS
ALL WELCOME!
DATE
SATURDAY
AUGUST 15/26
TIME
9:00 AM – 8:00 PM
PLACE
COLONAL
DANFORTH PARK
AREA 2
Menu
STARTING WITH
• Dosa & Sambal
• Bread & Sambal
• Doughnut
• Coffee
LUNCH
• Odiyal Kool
• Rice
• Mutton Curry
• Chicken Curry
• Veg Curry
• And many more delicious dishes!
FINISHING WITH
Koththu Rotti
Come and enjoy a day filled with
DELICIOUS FOOD, FUN ACTIVITIES,
LAUGHTER & GREAT COMPANY!
DON'T MISS THIS
WONDERFUL COMMUNITY EVENT!
We look forward to celebrating with you!

# இவ்வார ராசிபலன்




## 14-08-2026 வெள்ளி தொடக்கம் 20-08-2026 வியாழன் வரையும்

**மேஷம்:** துணிச்சலும் தன்னம்பிக்கையும் உங்கள் வெற்றிக்கு அடித்தளமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய முன்னேற்றங்கள் உருவாகும். மேலதிகாரிகளின் பாராட்டையும் நம்பிக்கையையும் பெறும் வாய்ப்பு கிடைக்கும். நீண்ட நாட்களாக தாமதமாக இருந்த வேலைகள் இப்போது சாதகமாக நிறைவேறும். பணவரவு சீராக இருந்து, எதிர்பாராத வருமானமும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே இருந்த மனக்கசப்புகள் நீங்கி ஒற்றுமை வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை அளிக்கும். காதல் உறவுகளில் புரிதல் அதிகரித்து நல்ல முடிவுகள் எடுக்கப்படும். உடல்நலத்தில் பெரிய பிரச்சினைகள் இருக்காது என்றாலும், அதிக வேலைப்பளுவால் சோர்வு மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. போதுமான ஓய்வும் சத்தான உணவும் அவசியம். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தினால் எதிர்பார்த்த வெற்றியை அடைவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து நிதானமாக செயல்பட்டால் இந்த வாரம் பல நல்ல வாய்ப்புகள் உங்கள் பக்கம் திரும்பும்.
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, பொன் மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 1,8.
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், வியாழன். இந்த வாரம் மேஷத்திற்கு 8.5/10 மதிப்பெண்.

**ரிஷபம்:** பொறுமையும் விடாமுயற்சியும் உங்களை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் இருந்து வந்த தடைகள் படிப்படியாக விலகி முன்னேற்றம் காண்பீர்கள். புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். அவற்றை திறமையாக கையாளுவதன் மூலம் நல்ல பெயரும் பாராட்டும் கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருந்து, பழைய பாக்கிகள் வசூலாகும் வாய்ப்பும் உள்ளது. குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரிக்கும். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். பிள்ளைகளின் வளர்ச்சி மனநிறைவை தரும். காதல் உறவுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு, எதிர்காலம் பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், செரிமானம் மற்றும் உணவுப் பழக்கத்தில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவார்கள். தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்தி திட்டமிட்டு செயல்பட்டால் இந்த வாரம் பல நன்மைகளை அனுபவிப்பீர்கள்.
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, வெள்ளை. அதிர்ஷ்ட எண்: 2,6.
அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, புதன். இந்த வாரம் ரிஷபத்திற்கு 8/10 மதிப்பெண்.

**மிதுனம்:** சுறுசுறுப்பும் புத்திசாலித்தனமும் உங்களுக்கு பல வெற்றிகளைத் தரும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் உருவாகும். உங்கள் பேச்சுத்திறமையும் திறமையான செயல்பாடும் முக்கிய நபர்களின் கவனத்தை ஈர்க்கும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். பணவரவு சீராக இருந்து, எதிர்பாராத வருமானமும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே நல்ல புரிதல் உருவாகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். காதல் உறவுகளில் இருந்த குழப்பங்கள் நீங்கி நெருக்கம் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு இருக்காது என்றாலும், அதிக அலைச்சலால் சோர்வு மற்றும் தூக்கமின்மை ஏற்படலாம். போதுமான ஓய்வு அவசியம். மாணவர்கள் கல்வியில் கவனத்தை அதிகரித்தால் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளது. முக்கிய முடிவுகளை நிதானமாக எடுத்தால் இந்த வாரம் பல சாதகமான மாற்றங்களை காண்பீர்கள்.
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 5,9.
அதிர்ஷ்ட நாள்: புதன், ஞாயிறு. இந்த வாரம் மிதுனத்திற்கு 8.5/10 மதிப்பெண்.

**கடகம்:** மன அமைதியும் குடும்ப மகிழ்ச்சியும் அதிகரிக்கும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி, புதிய நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் உழைப்புக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த ஒரு நல்ல செய்தி மன மகிழ்ச்சியை அளிக்கும். பணவரவு சீராக இருந்து, தேவையான செலவுகளை எளிதாக சமாளிப்பீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரித்து, உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையை ஏற்படுத்தும். காதல் உறவுகளில் இருந்த சிறிய மனவருத்தங்கள் விலகி நெருக்கம் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு இருக்காது என்றாலும், வயிறு மற்றும் செரிமானம் தொடர்பான விஷயங்களில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் கண்டு, போட்டித் தேர்வுகளிலும் சாதகமான பலன் பெறுவார்கள். பொறுமையுடனும் நிதானத்துடனும் செயல்பட்டால் இந்த வாரம் பல நல்ல வாய்ப்புகள் உங்கள் வாழ்க்கையில் அமையும்.
அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, இளம்பச்சை. அதிர்ஷ்ட எண்: 2,7.
அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன். இந்த வாரம் கடகத்திற்கு 8.5/10 மதிப்பெண்.

**சிம்மம்:** தலைமைத்துவ திறமையும் தன்னம்பிக்கையும் உங்களை வெற்றிப் பாதையில் முன்னேற்றும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய பொறுப்புகள் கிடைத்து, அவற்றை சிறப்பாக நிறைவேற்றி நல்ல பெயர் பெறுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டும் ஆதரவும் கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருந்து, எதிர்பாராத லாபமும் கிடைக்க வாய்ப்புள்ளது. குடும்பத்தில் மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடைபெறக்கூடும். கணவன்-மனைவி இடையே ஒற்றுமை அதிகரித்து, உறவுகள் வலுப்படும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். காதல் உறவுகளில் இனிமையான மாற்றங்கள் ஏற்பட்டு, எதிர்காலம் குறித்த நல்ல முடிவுகள் எடுக்கப்படலாம். உடல்நலத்தில் பெரிய பிரச்சினைகள் இருக்காது என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு ஏற்படலாம். ஓய்வுக்கும் உடற்பயிற்சிக்கும் நேரம் ஒதுக்குவது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கி ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவார்கள். தற்பெருமையைத் தவிர்த்து அனைவருடனும் இணக்கமாக நடந்துகொண்டால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறும்.
அதிர்ஷ்ட நிறம்: தங்க மஞ்சள், ஆரஞ்சு. அதிர்ஷ்ட எண்: 1,3.
அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, செவ்வாய். இந்த வாரம் சிம்மத்திற்கு 9/10 மதிப்பெண்.

**கன்னி:** புத்திசாலித்தனமும் திட்டமிட்ட செயல்பாடும் உங்களுக்கு வெற்றியைத் தரும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் நிலுவையில் இருந்த பணிகள் நிறைவடைந்து மனநிறைவு ஏற்படும். உங்கள் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். புதிய முயற்சிகளைத் தொடங்குவதற்கும் இது சாதகமான காலமாக இருக்கும். பணவரவு சீராக இருந்து, தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்த முடியும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். கணவன்-மனைவி இடையே நல்ல புரிதல் உருவாகும். பிள்ளைகளின் கல்வி மற்றும் முன்னேற்றம் மகிழ்ச்சியை அளிக்கும். காதல் உறவுகளில் நம்பிக்கையும் நெருக்கமும் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு இருக்காது என்றாலும், வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் கழுத்து அல்லது முதுகு வலி ஏற்படலாம். போதுமான ஓய்வை எடுத்துக்கொள்ளுங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு எதிர்பார்த்த வெற்றியைப் பெறுவார்கள். முக்கிய முடிவுகளை நிதானமாக எடுத்தால் இந்த வாரம் பல நல்ல மாற்றங்கள் உங்கள் வாழ்க்கையில் நடைபெறும்.
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, வெள்ளை. அதிர்ஷ்ட எண்: 5,6.
அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி. இந்த வாரம் கன்னிக்கு 8.5/10 மதிப்பெண்.

**துலாம்:** சமநிலையும் நல்ல முடிவுகளும் உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் உருவாகி, நீண்ட நாட்களாக இருந்த தடைகள் விலகும். உங்கள் பேச்சுத்திறமையால் முக்கிய நபர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருந்து, எதிர்பாராத வருமானமும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் ஒற்றுமையும் அதிகரிக்கும். உறவினர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும். காதல் உறவுகளில் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி நல்ல புரிதல் உருவாகும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு இருக்காது என்றாலும், அதிக மன அழுத்தத்தைத் தவிர்ப்பது நல்லது. போதுமான தூக்கமும் ஓய்வும் அவசியம். மாணவர்கள் கல்வியில் கவனத்தை அதிகரித்தால் சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து நிதானமாக செயல்பட்டால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறும்.
அதிர்ஷ்ட நிறம்: நீலம், வெள்ளை. அதிர்ஷ்ட எண்: 6,9.
அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, சனி. இந்த வாரம் துலாமிற்கு 8.5/10 மதிப்பெண்.

**விருச்சிகம்:** துணிவும் விடாமுயற்சியும் உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய முன்னேற்றங்கள் உருவாகும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த ஒரு முக்கிய வாய்ப்பு கிடைத்து மனநிறைவு அடைவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டும் சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருந்து, தடைபட்டிருந்த தொகைகள் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி அன்பு வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். காதல் உறவுகளில் நல்ல புரிதல் உருவாகி, எதிர்காலம் குறித்த முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம். உடல்நலத்தில் பெரியபாதிப்பு இருக்காது என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் மூட்டு வலி ஏற்படலாம். ஓய்விலும் உணவுப் பழக்கத்திலும் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளது. கோபத்தை கட்டுப்படுத்தி பொறுமையுடன் நடந்துகொண்டால் இந்த வாரம் பல சாதகமான மாற்றங்களை அனுபவிப்பீர்கள்.
அதிர்ஷ்ட நிறம்: அடர் சிவப்பு, மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 9,3.
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், வியாழன். இந்த வாரம் விருச்சிகத்திற்கு 8.5/10 மதிப்பெண்.

**தனுசு:** அதிர்ஷ்டமும் புதிய வாய்ப்புகளும் உங்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைத்து, புதிய முயற்சிகளில் நல்ல பலன் காண்பீர்கள். உங்கள் திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். வெளிநாடு அல்லது தொலைதூரம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான செய்திகள் வரக்கூடும். பணவரவு சீராக இருந்து, சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். காதல் உறவுகளில் இனிமையான மாற்றங்கள் உருவாகி, உறவு மேலும் வலுப்படும். உடல்நலத்தில் பெரிய பிரச்சினைகள் இருக்காது என்றாலும், அதிக அலைச்சலால் சோர்வு ஏற்படலாம். போதுமான ஓய்வு எடுத்துக்கொள்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் கவனத்துடன் செயல்பட்டால் எதிர்பார்த்த வெற்றியை அடைவார்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வாய்ப்புகளை சரியாக பயன்படுத்தினால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், ஊதா. அதிர்ஷ்ட எண்: 3,7.
அதிர்ஷ்ட நாள்: வியாழன், ஞாயிறு. இந்த வாரம் தனுசுக்கு 9/10 மதிப்பெண்.

(தொடர்ச்சி 23 பக்கம்)

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## திருமங்கலாய் சிவன் கோவில்
## திருக்கரைசையம்பதி, திருகோணமலை

சைவசமயம் திராவிடமக்களின் பழம்பெரும் சமயமாகக் காணப்படுகின்றது. "பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்" என்பது, பேராசிரியர் மறைமலை அடிகளாரின் ஆராய்ச்சி முடிவு. இன்றைய உலகிலே எத்தனையோ சமயங்கள் காணப்பட்டாலும், அவைகளுள் மிகவும் தொன்மை வாய்ந்தது சைவ சமயமேயாகும். ஏத்தனையோ பழம்பெரும் சமயங்கள் இந்நாளில் மறைந்தொழிந்து போய்விட்டன. அவ்வாறில்லாமல் சுண்ணாம்புக் கற்காலம் எனக் கூறப்படும் சிந்தனைக்கெட்டாத காலம் முதல் ஏறத்தாழ இருபதாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக, இன்றளவும் நின்று நிலைபெற்று உயிர்ப்பாற்றல் மிக்க நிலையில் சைவசமயம் விளங்கி வருகின்றது. இதனை சேர் ஜோண் மார்ச்சல் போன்ற மேல்நாட்டு ஆராய்ச்சி அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகிலே தோன்றிய பல மதங்களின் காலத்தையும், அம் மதங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டதென்பதையும் நிச்சயித்துக் கூறமுடியும். ஆனால் சைவசமயத்தின் காலத்தையோ, அன்றி யாரால் தாபிக்கப்பட்டது என்ற வரையறையையோ கூற முடியாது. சைவசமயம் அநாதியானது. மனிதன் வாழ்வு நெறியை ஆரம்பித்தபோது, இயற்கையாக மலர்ந்த வாழ்வு நெறியாக சைவசமயத்தைக் கருதமுடியும். பிற்காலத்தில் சிந்துப் பள்ளத்தாக்கினூடாக வந்த மேலைத்தேசத்தவர்கள் இம்மதத்தை இந்து மதம் என்றும், அதனைப் பின்பற்றியோரை இந்துக்கள் என்றும் காரணப் பெயரால் அழைத்தனர். பின்னாளில் இப்பெயரே நிலைத்து, சைவசமயம் என்ற பொதுப் பெயர் மறைந்து, சிவனை முழுமுதற் கடவு-ளாகக் கொண்டு வழிபடுவோரை மட்டுமே குறிக்கும் பெயராக தற்கால வழக்கிலே போற்றப்படுகின்றது.

பிற்காலத்தில் இந்துமதத்திலே பிளவும், கருத்து வேற்றுமையும் ஏற்பட்டு, தத்தம் சமயமே முதற்சமயம் என்ற கொள்கையும் வலுப்பட்டு, ஒவ்வொரு சமயத்தவர்களும் ஒன்றோடொன்று முரண்பட்ட வேளையில், அவற்றை ஒருநிலைக்குக் கொண்டு வந்து காப்பாற்ற சில நெறிமுறைகளைக் கையாண்ட ஸ்ரீ சங்கரர், சைவம், சாக்தம், வைணவம், காணபதியம், கௌமாரம், சௌரம் என்ற பிரிவுகளைக் கொண்டதாக இந்துமதத்தை வகுத்தார். இதன்படி சைவத்தின் முழுமுதற் தெய்வமாக சிவனையும், சாக்த மதத்தின் முழுமதற் தெய்வமாக சக்தியையும், வைணவத்தின் முழுமுதற் தெய்வமாக திருமாலையும், காணாபதியம் என்ற மதத்தின் முழுமுதற் தெய்வமாக கணபதியையும், கௌமாரம் என்ற மதத்தின் முழுமுதற் கடவுளாக முருகனையும், சௌரம் என்ற மதத்தின் முழுமதற் கடவுளாக சூரியனையும் வகுத்தார். இவ்வாறான அறுவகைச் சமயங்களும் ஒன்றிணைந்து இந்து சமயம் எனப் போற்றப்பட்டது. ஆயினும் சைவசமயத்தினுள் ஏனைய சமயங்கள் சங்கமமானநிலையிலேயே தற்கால வணக்கமுறை காணப்படுகின்றது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே ஈழத்திலே சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயம் எழுச்சி பெற்றுக் காணப்பட்டுள்ளது. ஈழத்திலே வாழும் சிங்கள இனத்தவர்களுடைய வரலாறு கி.மு 543 ஆம் ஆண்டிலே கலிங்கதேசத்திலிருந்து நாடுகடத்தப்பட்டு ஈழம் வந்த விஜயனுடன் ஆரம்பமாகின்றது. அக்காலத்திலேயே சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட பஞ்ச ஈஸ்வரங்களான முன்னேஸ்வரம், திருக்கேசீச்சரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகிய பஞ்ச ஈஸ்வரங்கள் சிறப்போடு விளங்கியுள்ளன.

வழிபாட்டிலே முதன்மையான வழிபாடாக சிவ வழிபாடு வரலாற்றுக் காலம் முதல் போற்றப்பட்டுள்ளது. சிவம் என்பதற்கு மங்கலம், சுபம், நன்மை, பேரானந்தம், உண்மை, மேன்மை எனப் பல பொருள்கள் உள் அடங்கிக் காணப்படுகின்றன. சிவ வழிபாட்டின் பெருமையை அதன் கருத்தே புரிய வைத்தள்ளது.

> *" சைவம் சிவத்தடன் சம்பந்தமாகுதல்*
> *சைவந் தன்னையறிந்தே சிவஞ் சாருதல் "*

எனத் திருமந்திரத்திலே கூறப்பட்டுள்ளது.

ஆரியர் வருகை காரணமாக, இவ்வாறான சிறப்புப் பெற்ற சைவத்துடன், பிற்காலத்தில் பல்வேறு உப தெய்வங்களும் இணைக்கப்பட்டு, சிவவழிபாடு பின்தள்ளப்பட்டது. ஆயினும் சைவசமயிகள் சிவனையே முழுமுதற் கடவுளாகவும், ஏனைய தெய்வங்களை அடுத்தநிலையிலே வைத்து எண்ணும் மரபும் பலரிடையே காணப்படுகின்றது. "உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்" என்ற தத்துவார்த்தமான உண்மையைப் புரிந்து கொண்டால், மனிதரிடையே காணப்படும் சமய பேதங்கள் அகன்றுவிடும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ்மன்னர்கள் பலர் ஈழத்தை ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் பல சைவஆலங்களைக் கட்டிப் பேணி வளர்த்துள்ளனர். காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அந்நியர் படையெடுப்பு, உள்நாட்டுப் போர்கள் என்பனவற்றின் காரணமாக, பழமையான பல கோவில்கள் அழிந்தாலும், அவற்றின் சுவடுகள், சைவமக்களாகிய தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களை இனங்காட்டுவதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான கோவிலாகத் திருக்கரைசையம்பதி திருமங்கலாய் கோவில் காணப்படுகின்றது.

மன்னர்கள் கட்டிய கோவில்கள் பல ஈழமெங்கும் காணப்படுகின்றன. பல மண்ணோடு மண்ணாகப் புதைந்து கிடக்கின்றன. இவ்வாறு கட்டப்பட்ட திருக்கோவில்களுள் ஒன்றாக திருக்கரைசையம்பதி திருமங்கலாய் சிவன்கோவில் காணப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் கொட்டியாபுரப்பற்றிலுள்ள மூதூரிலிருந்த பதினாறு கிலோமீற்றர் தூரத்தில் கிளிவெட்டி என்ற சைவக் கிராமம் அமைந்துள்ளது. இங்கு திருக்கரசையம்பதி திருமங்கலாய் சிவன்கோவில் காணப்படுகின்றது.

வளரும்..



# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 12-05-1951 - மறைவு: 13-08-2026

## சிவஸ்ரீ பிறைசூடி குருக்கள்
(யாழ்ப்பாணம் - சுழிபுரம்)



யாழ்ப்பாணம் சுழிபுரம் கிழக்கில் அமைந்துள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயத்தின் முதன்மைக் குருக்கள் சிவஸ்ரீ பிறைசூடி குருக்கள் அவர்கள் தாயகத்தில் சிவபதமடைந்தார் என்ற செய்தி கேட்டு சொல்லொணாத் துயரமும் அதிர்ச்சியும் அடைகிறோம்.
பல தசாப்தங்களாகப் பறாளைப் பதியின் பிள்ளையாரின் திருவடிகளுக்குத் தன் கைகளால் பூசை செய்து, எண்ணற்ற பக்தர்களின் வாழ்வில் ஆன்மீக ஒளியேற்றிய ஒரு உன்னதப் பெருந்தகை இன்று நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்.
அவரது மந்திர உச்சாடனங்களும், சாந்தமான முகமும், பக்தி நெறியும் அந்த ஆலயத்தின் ஒவ்வொரு தூணிலும் எப்போதும் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.
அன்னாரின் சேவையைப் பாராட்டி அண்மையில் சுழிபுரத்தில் நடைபெற்ற விக்ரோரியாக் கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவையொட்டி விசேட பாராட்டு விழாவில் சிவஸ்ரீ பிறைசூடி குருக்கள் அவர்கள் கௌரவிக்கப்பெற்றார்.
ஆன்மீகப் பணியையே தன் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த குருதேவரின் மறைவு, சைவப் பெருமக்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் பேரிழப்பாகும்.அன்னாரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், சுழிபுரம் கிராம மக்களுக்கும், உலகெங்கும் பரந்து வாழும் பறாளை விநாயகரின் பக்தர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். குருக்கள் அவர்களின் ஆன்மா சிவபெருமானின் திருவடி நிழலில் என்றும் அழியாத பேரின்பப் பெருநிலையை (முத்தி நிலை) அடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி!"

**கனடாவில் மேலதிகத் தொடர்புகளுக்கு: கந்தசாமி தவச்செல்வம்**
(மைத்துனர்- 647 708 3444)

இங்ஙனம்:

மனைவி: 011 94757730655 (யாழ்ப்பாணம்), மகள்: +33764 306 156 (பிரான்ஸ்)
கந்தசாமி தவச்செல்வம் (மைத்துனர் - 647 708 3444), கந்தசாமி திருச்செல்வம் (மைத்துனர் - 416 400 1279)
ஸ்ரீ கணேசானந்தக் குருக்கள் (சகோதரர்): 1613 805 9857)




# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**மகரம்:** கடின உழைப்புக்கு உரிய பலன் கிடைத்து முன்னேற்றம் காணும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் இருந்து வந்த தடைகள் விலகி புதிய வளர்ச்சி ஏற்படும். உங்கள் பொறுப்புணர்வும் செயல்திறனும் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறச் செய்யும். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த காரியங்கள் சாதகமாக முடிவடையும். பணவரவு சீராக இருந்து, எதிர்பாராத வருமானமும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் ஒற்றுமையும் அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையை அளிக்கும். காதல் உறவுகளில் நல்ல புரிதல் உருவாகி மனநிம்மதி கிடைக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு இருக்காது என்றாலும், மூட்டு வலி அல்லது உடல் சோர்வு ஏற்பட வாய்ப்புள்ளதால் ஓய்வில் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் கண்டு ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவார்கள். பொறுமையுடனும் திட்டமிட்ட செயல்பாட்டுடனும் நடந்துகொண்டால் இந்த வாரம் பல வெற்றிகளைப் பெறுவீர்கள்.
அதிர்ஷ்ட நிறம்: அடர் நீலம், பச்சை. அதிர்ஷ்ட எண்: 8,4.
அதிர்ஷ்ட நாள்: சனி, வெள்ளி. இந்த வாரம் மகரத்திற்கு 8.5/10 மதிப்பெண்.




**கும்பம்:** புதிய சிந்தனைகளும் நல்ல வாய்ப்புகளும் உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய முயற்சிகள் வெற்றியடையும். உங்கள் திறமை மற்றும் புத்திசாலித்தனத்தால் முக்கியமான நபர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த ஒரு நல்ல செய்தி மன மகிழ்ச்சியைத் தரும். பணவரவு திருப்திகரமாக இருந்து, சேமிப்பை அதிகரிக்க வாய்ப்பு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். கணவன்-மனைவி இடையே நல்ல புரிதல் உருவாகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஒத்துழைப்பு மன உற்சாகத்தை அதிகரிக்கும். காதல் உறவுகளில் இனிமையான தருணங்கள் உருவாகி உறவு வலுப்படும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், தூக்கமின்மை மற்றும் மன அழுத்தத்தைத் தவிர்க்க ஓய்வுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். மாணவர்கள் கல்வியில் கவனத்துடன் செயல்பட்டால் சிறந்த வெற்றியைப் பெறுவார்கள். முக்கிய முடிவுகளை நிதானமாக எடுத்தால் இந்த வாரம் பல நல்ல முன்னேற்றங்களை அனுபவிப்பீர்கள்.
அதிர்ஷ்ட நிறம்: நீலம், ஊதா. அதிர்ஷ்ட எண்: 4,8.
அதிர்ஷ்ட நாள்: சனி, புதன். இந்த வாரம் கும்பத்திற்கு 8.5/10 மதிப்பெண்.



**மீனம்:** நம்பிக்கையும் நல்ல மாற்றங்களும் உங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியை அதிகரிக்கும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து முன்னேற்றம் காண்பீர்கள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முயற்சிகள் வெற்றியடைந்து மனநிறைவு ஏற்படும். மேலதிகாரிகளின் பாராட்டும், சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருந்து, தடைபட்டிருந்த சில தொகைகள் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையையும் மகிழ்ச்சியையும் தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி உறவு மேலும் வலுப்படும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக சிந்தனையால் மன சோர்வு அல்லது தூக்கமின்மை ஏற்படலாம். தியானம், போதுமான ஓய்வு மற்றும் சத்தான உணவை கடைபிடிப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு போட்டித் தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றியைப் பெறுவார்கள். தன்னம்பிக்கையுடன் நிதானமாக செயல்பட்டால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நிறைவேறும்.
அதிர்ஷ்ட நிறம்: கடல் பச்சை, மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 3,7.
அதிர்ஷ்ட நாள்: வியாழன், திங்கள். இந்த வாரம் மீனத்திற்கு 9/10 மதிப்பெண்.

# எம் செம்மணி எலும்புகள் கேட்கும் நீதி




காலம்...
ஒரு ஒப்பற்ற தலைமகனைப் பிரசவித்தது...
வரலாற்றின் இருண்ட பக்கங்களில்
ஒரு பெயர் மட்டும் அல்ல -
ஒரு இனத்தின் கனவாக
அவன் எழுந்து நின்றான்.

விடுதலைப் புலிகள்...
அவர்கள் வித்தியாசமானவர்கள்...
மரணத்தைப் பார்த்தும்
மனம் தளராதவர்கள்,
தோல்வியைச் சந்தித்தும்
கனவைத் துறக்காதவர்கள்,
மண்ணை நேசிப்பதை
மூச்சாகக் கொண்டவர்கள்.

ஆனால்...

ஈழ விடுதலையின்
இறுதிக் கணங்கள் வந்தபோது,
வானம் அழுதது...
கடல் மௌனமானது...
மண்ணோ -
தன் மார்புக்குள்
ஆயிரம் கதைகளைப் புதைத்துக் கொண்டது.

அந்த மண்ணின் அடியில்
மௌனமாகக் கிடந்தவர்கள்
ஒருநாள் எழுந்தார்கள்...

**செம்மணி...!**

மனிதப் புதைகுழி என்று
வரலாறு அழைத்த அந்த இடம்,
இன்று
எலும்புக்கூடுகளின் மொழியில்
நீதியை அழைக்கிறது.

அவை வெறும் எலும்புகள் அல்ல...
ஒரு தாயின் கண்ணீர்,
ஒரு தந்தையின் காத்திருப்பு,
ஒரு சகோதரியின் அழுகை,
ஒரு குழந்தையின்
“அப்பா எங்கே?“ என்ற கேள்வி.

மண்ணுக்குள் புதைக்கப்பட்ட
உடல்கள் அழிந்திருக்கலாம்...
ஆனால்
அவர்களின் சாட்சியம்
அழியவில்லை.

செம்மணியின் காற்று
இன்னும் கேட்கிறது -

**“எங்கள் உயிர்களுக்கு
நீதி எங்கே?”**

ஆட்சிகள் மாறுகின்றன...
கொடிகள் மாறுகின்றன...
அரசியல்வாதிகளின்
வார்த்தைகள் மாறுகின்றன...

ஆனால்
மகாவம்ச மனோநிலை -
அது மட்டும்
மாறாமல் தொடர்கிறது.

வரலாற்றை மறைக்கலாம்...
சாட்சிகளை மௌனப்படுத்தலாம்...
புதைகுழிகளை மண்ணால் மூடலாம்...

ஆனால்
மண்ணின் நினைவுகளை
யாரால் புதைக்க முடியும்?

ஈழத்தின் ஒவ்வொரு மண்துகளும்
ஒரு சாட்சியம்...
ஒவ்வொரு கல்லறையும்
ஒரு வரலாறு...
ஒவ்வொரு கண்ணீர்த்துளியும்
ஒரு குற்றப்பத்திரிகை...

இன்று
செம்மணியின் எலும்புகள்
வானத்தை நோக்கி
கைகளை உயர்த்தவில்லை...

அவை வெறும்
மௌனமாகப் படுத்திருக்கின்றன.

ஆனால் அந்த மௌனமே
உலகின் நீதிமன்றத்தில்
மிகப்பெரிய சாட்சியாகிறது.

காலம் நகரட்டும்...
தலைமுறைகள் மாறட்டும்...
வரலாற்றுப் புத்தகங்கள்
மீண்டும் மீண்டும் எழுதப்படட்டும்...

ஒருநாள் -

இந்த மண்ணின் குழந்தைகள்
செம்மணியின் அருகே நின்று
கேட்பார்கள்:

**“இங்கே புதைக்கப்பட்டது
யார்?”**

அப்போது
மண் பதில் சொல்லும் -

**“இவர்கள்
ஒரு இனத்தின்
மறக்க முடியாத நினைவுகள்...”**

கடல் பதில் சொல்லும் -

**“இவர்கள்
நீதிக்காகக் காத்திருக்கும்
மௌனக் குரல்கள்...”**

வரலாறு பதில் சொல்லும் -

**“இவர்களின் கதை
இன்னும் முடியவில்லை...”**

ஏனெனில்...

**மண்ணில் புதைக்கப்பட்ட
உடல்களுக்கு மரணம் இருக்கலாம்
ஆனால்
நீதிக்காக எழுந்த நினைவுகளுக்கு
மரணம் இல்லை.**

---

*ஈழத்து நிலவன்*
*தமிழ்த் தேசிய வரலாற்றாசிரியர்*
*உலக அரசியல், பொருளாதாரம், உளவுத்துறை*
*மற்றும் இராணுவ விவகார ஆய்வாளர்*
*12-08-2026*

---




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524




29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்




உதயம் 1584 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 14, 2026




# யாழ்ப்பாணத்தை சேர்ந்தோரிடம் வெளிநாட்டு ஆசைகாட்டி கடந்த சில வாரங்களுக்குள் ஏழரைக்கோடி ரூபா மோசடி செய்யப்பட்டது!

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து, யாழ்ப்பாணத்தை சேர்ந்தோரிடம் கடந்த சில வாரங்களுக்குள் ஏழரைக் கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை மோசடி செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து யாழ். மாவட்டத்தில் பண மோசடி செய்யும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான நிலையிலேயே கடந்த சில வாரங்களாக இத்தகைய மோசடிகள் சடுதியாக அதிகரித்துள்ளன என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(தொடர்டச்சி 4ம் பக்கம்)

# ரொறன்ரோ "நிரோ டான்ஸ் கிறியேசன்" – குலோபல் கலாச்சார நிறுவனம் இணைந்து நடத்திய Majestic Yathra – 2026 நாட்டிய விழா





ரொறன்ரோ "நிரோ டான்ஸ் கிறியேசன்" மற்றும் குலோபல் கலாச்சார நிறுவனம் இணைந்து நடத்திய **Majestic Yathra**-2026 நாட்டிய விழா கடந்த 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பிரம்ரன் மாநகரில் சிறப்பாக நடைபெற்றது. அதில் இந்தியாவின் மாநிலங்கள் சிலவற்றில் மன்னர் காலத்தில் கடைப்பிடிக்கப்பெற்ற கலாச்சார விழுமியங்களை நடனங்கள் மூலம் காட்டும் தொடர் நடன அம்சங்கள் இடம்பெற்றன. மிகுந்த பொருட்செலவில் மேடையேற்றப்பெற்ற இந்த நாடக விழாவில் 50க்கும் மேற்பட்ட நடனக் கலைஞர் பங்குபற்றினார்கள்.

இங்கு காண்பபடும் படங்களில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மேயர் பெற்றிக் பிரவுன் அவர்களை பரராஜசிங்கம் தம்பதி கௌரவிப்பதையும் ஒரு நடனக் காட்சியையும் காணலாம்.

# ஆட்சியில் மாறும் முகங்கள்! அரசியலில் மாறாத குணங்கள்!

"6 தமிழ்பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பில் தமிழ் ,முஸ்லிம், மலையக பிரதிநிதிகளினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள், குற்றச்சாட்டுக்கள், வலியுறுத்தல்களை கவனத்தில் எடுக்காது பூசி மெழுகி பதிலளித்து அனுப்பிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அதே வார பாராளுமன்ற அமர்வுகளில் தனது அமைச்சர்களை வைத்தே தமிழ் தரப்புக்களின் கோரிக்கைகள், வலியுறுத்தல்களை முற்று முழுதாகவே நிராகரித்து விட்டார்" ----கே.பாலா

(தொடர்ச்சி 15ம் பக்கம்)




# கோர்ன்வோல் சிவன் ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவம் "பக்திப்" பெருக்குடன் இடமட்பெற்றது



கடந்த திங்கட்கிழமை 10ம் திகதி அன்று கனடாவின் கோர்ன்வோல் நகரில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவம் பக்திப் பெருக்குடன் நடைபெற்றது என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார். இங்கே காணப்படும் படங்களில் அடியார்கள் பெண்கள் ஒரு பக்கமும் ஆண்கள் ஒரு பக்கமுமாக வடங்களைப் பிடித்து இரதத்தை இழுத்து வருவதையும் இரதோற்சவத்தை ரொறன்ரோவிலிருந்து சென்று புகைப்படங்கள் எடுத்து அங்கு செல்லாதவர்களுக்கு பிரசுரம் செய்து வரும் "பிகைன்ட் மீ" ஊடக நிறுவனத்தைச் சேர்ந்த நிரோஸ் ஆலயத்தின் அறங்காவலர் சிவா அவர்களால் கௌரவிக்கப்பெறுவதையும் காணலாம்.

